Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 257

வியாழக்கிழமை 10 ஒகஸ்ட் 2023

ஆடி 25



# பொலிஸ் அதிகாரத்தை விடுத்து பதின்மூன்றை பலப்படுத்துவோம்

## ஜனாதிபதி ரணில் நாடாளுமன்றில் அழைப்பு

**கொழும்பு, ஒகஸ்ட் 10**

**13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாணசபைகளுக்கு அதிகாரங்கள் வழங்குவதில் பொலிஸ் அதிகாரம் மிகவும் உணர்வுபூர்வமான விடயமாக மாறியுள்ளது. அதனால் மாகாணசபையின் ஏனைய அதிகாரங்கள் தொடர்பில் நாம் முதலில் உடன்பாட்டுக்கு வருவது மிகவும் நடைமுறைச் சாத்தியமானதாக இருக்கும். உணர்வுபூர்வமான விடயங்களுக்கு முன்னுரிமை அளித்தால் ஒருமித்த கருத்தை அடைவது கடினமாக இருக்கும்.** »09

## ஆசிரியரின் தூக்குதலில் மாணவனுக்கு பாதிப்பு

யாழ்., ஒக்.10
வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை ஒன்றில் ஆசிரியர் ஒருவர் »10

## ரணிலின் தீர்வு முயற்சிக்கு அரச எம்.பிக்கள் ஆதரவா?

### மனோ எம்.பி. நாடாளுமன்றில் கேள்வி

கொழும்பு, ஒக.10
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய இனப் பிரச்சினை தொடர்பாகவும், 13 ஆவது திருத்தம் தொடர்பாகவும் தனது யோசனைகளை »11



பறாளாய் முருகன் ஆலயம்

## அரச மரத்தை ஆய்வுசெய்ய ஜனாதிபதி ரணில் முடிவு

### அதன்பின்னரே வர்த்தமானி மீளப்பெறப்படுமாம்

யாழ்ப்பாணம், ஒக. 10
பறாளாய் முருகன் ஆலயத்தின் அரச மரத்தின் வயதை விஞ்ஞானபூர்வமாக ஆராயவுள்ள »11

## வன்முறைக் கும்பல் வாளுடன் அட்டகாசம்

வவுனியா, ஒக.10
வவுனியா, வைரவப்புளியங்குளத்தில் வன்முறைக் கும்பல்ஒன்றுவாள்களுடன் »10

## காணிகள் விடுவிப்பு; கைதிகளுக்கு மன்னிப்பு

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக.10
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவில் இராணுவம் மற்றும் கடற்படையினர் பாவனையிலுள்ள 34.4 ஏக்கர் காணிகளை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. »11

## பறாளாய்க் கோயிலில் இருப்பது சங்கமித்தையின் அரசமரமாம்!

### பௌத்தமயமாக்கலுக்கு ஒத்தூதுகிறார் மறவன்புலவு சச்சி

யாழ்ப்பாணம், ஒக.10
சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலய வளாகத்தில் உள்ள அரச மரம் சங்கமித்தையாலேயே கொண்டுவரப்பட்டது என்று இலங்கை சிவசேனையின் தலைவர் மறவன்புலவு »11

## கட்டைக்காடு விபத்தில் இளைஞன் சாவு!

யாழ்., ஒக.10
வடமராட்சிகிழக்கு, கட்டைக்காட்டில் நேற்று »10

வடக்கு - கிழக்கில் உள்ள

## சிங்கள மக்களுடனும் பேச்சு நடத்த வேண்டுமாம் ரணில்!

### கொளுத்திப் போடுகிறார் விமல்

கொழும்பு, ஒக.10
வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழ், முஸ்லிம் மக்கள் மட்டுமல்ல சிங்களமக்களும் வாழ்கின்றனர். அவர்கள் இரண்டாம் »11



## பாலியல் தொந்தரவுகளால் சிறுமி தற்கொலை முயற்சி?

### ஊர்காவற்றுறை பொலிஸ் விசாரணை

யாழ்ப்பாணம், ஒக.10
பாலியல் ரீதியான தொல்லைக்கு உள்ளான 12 வயதுச் சிறுமி ஒருவர் உயிரை மாய்க்க முயன்றபோது, »10

## புலிபாய்ந்தகல்லில் அனுமதியின்றி வாடி

### உடனடியாக அகற்றப் பணிப்பு
### குடியேற்ற முயற்சி என மக்கள் சந்தேகம்

முல்லைத்தீவு, ஒக.10
முல்லைத்தீவு, நாயாறுக்குத் தெற்கே உள்ள புலிபாய்ந்தகல் என்னும் இடத்தில் பெரும் »10

## பொலிஸ் அதிகாரம் வழங்கினால் தனிநாடு கோருவர் என்பது மடமை

### பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக.10
மாகாணங்களுக்குப் பொலிஸ் அதிகாரங்களை வழங்கி தமிழ் இளைஞர்களை அதில் இணைத்து ஆயுதம் வழங்கினால் »10

## அக்கரை கடலில் குளித்தவர் மரணம்

யாழ்., ஒக.10
தொண்டைமானாறு அக்கரைக் கடலில் குளிக்கச் சென்றவர் »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் இணைந்தசேவை நேர அட்டவணை விரைவில்

## மாவட்டச் செயலர் தலைமையில் நடந்த கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஓக. 10

இலங்கைப் போக்குவரத்துச்சபை பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் இரண்டும் இணைந்ததாக இணைந்த சேவை நேர அட்டவணையைத் தயார் செய்யுமாறு யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன், வடக்கு மாகாண போக்குவரத்து அதிகாரிகள் சபையினரைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதன்போதே மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில், வீரசிங்கம் மண்டபத்துக்கு அருகில் அமைக்கப்பட்டு நீண்ட தூர பேருந்து நிலையத்தை முழுமையாகச் செயற்படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டது. அந்தப் பேருந்து நிலையத்தை இயக்குவதற்காக யாழ். மாநகர சபையில் 2021 ஆம் ஆண்டு உறுப்பினர்களால் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன. அந்தத் தீர்மானங்கள் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு யாழ். மாநகரசபையால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. வர்த்தமானியில் பிரசுர மானதும் அதற்கு முரணாகச் செயற்படும் அனைத்துத் தரப்பினருக்கும் எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் இதன்போது உறுதியளித்துள்ளனர்.

மேலும், யாழ். நகரில் ஆஸ்பத்திரி வீதியில் வாகனங்களிலிருந்து பொருள்களை இறக்குவதற்கான நேரம் ஒதுக்கப்பட்டுள்ள விடயமும் யாழ். மாநகரசபையால் வர்த்தமானி பிரசுரத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தகவலும் கூட்டத்தில் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வர்த்தமானியும் பிரசுரமான பின்னர் அதற்கு முரணாக பொருள்களை இறக்குபவர்களுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுப்பர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

சமூகப் பணிகள் செய்ய

# பின்னடித்து நிற்கின்றன அரசசார்பற்ற நிறுவனங்கள்

## யாழ். மாவட்டச் செயலர் ஆதங்கம்



**யாழ்ப்பாணம், ஓக. 10**

**மக்கள் விழிப்புணர்வு நடவடிக்கைகளில் அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வராது பின்னடித்து நிற்கின்றன. அவை சமூகப் பொறுப்புடன் செயலாற்ற களத்தில் இறங்க வேண்டும். உங்கள் பிரதேசம் உங்கள் மக்கள் எனச் சிந்தித்து செயற்பட எம்முடன் கைகோர்க்க வேண்டும் என யாழ்.மாவட்டச் செயலர் அ. சிவபாலசுந்தரன் அழைப்பு விடுத்துள்ளார்.**

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சிறுவர் பாதுகாப்புக் குழுக் கூட்டம் இடம் பெற்றது.

அதில் சிறுவர் சார்பில் பல விடயங்கள் சுட்டிகாட்டப்பட்டு ஆராயப்பட்டன. அதன்போது நல்லூர் திருவிழாவை முன்னிட்டு சிறுவர் விழிப்புணர்வு பதாகைகளை அச்சிட யாராவது அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வருகின்றீர்களா? என யாழ்.மாவட்டச் செயலர் வினவிய போது அனைவரும் அமைதியாக இருந்தனர்.

அதனையடுத்து கருத்துத் தெரிவித்த மாவட்டச் செயலர்,

அரச சார்பற்ற நிறுவனங்கள் சார்பில் பிரதிநிதிகளாக இங்கே வருகை தருகின்றீர்கள். ஆனால் எந்தவிதக் கருத்தாடல்களையும் வழங்க முன்வருகிறீர்கள் இல்லை. இன்றைய சமூகம் பல்வேறு சவால்களிலிருந்து மீண்டெழ நீங்களும் உறுதுணையளிக்க வேண்டும். விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும். அரச திணைக்களங்கள் நடவடிக்கை எடுக்கும் என பார்த்துக்கொண்டிராது நீங்களும் களத்தில் இறங்க வேண்டும். நீங்களும் உங்கள் பிரதேசம் உங்கள் மக்கள் என பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும் - என்றார். (ச-125)

# பொன்னாலையில் உரிய அனுமதியில்லாத முன்பள்ளியை மூடவும்

## மாவட்டச் செயலர் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஓக. 10

அனுமதி பெறாது தன்னிச்சையாக இயங்கும் முன்பள்ளிகளைக் கண்டறிந்து உடன் மூட நடவடிக்கை எடுங்கள் என யாழ்.மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் அறிவுறுத்தியுள்ளார். சிறுவர் பாதுகாப்புக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது சங்கானை பிரதேச செயலர் பிரிவில் பொன்னாலையில் உரிய அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளாமல் தன்னிச்சையாக முன்பள்ளி ஒன்று இயங்குகின்றது எனச் சுட்டிக்காட்டப்பட்டது. உடனடியாக அந்த முன்பள்ளியை மூடுவதற்குரிய நடவடிக்கையை எடுக்கவேண்டும்.

ஒரு கிராமஅலுவலர் பிரிவில் இரண்டு முன்பள்ளிகள் இவ்வாறு இயங்கி வருகின்றன. அனுமதியின்றி முன்பள்ளி நடத்தப்படுவது சட்டமுறையற்றது. அவ்வாறான முன்பள்ளிகளை உடனடியாகத் தடை செய்ய வேண்டும் என்றும் இது குறித்து பொலிஸாருக்கு அறிவித்தல் வழங்குவதாக மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டினார். (ச-125)

# தமிழ்ப் பொலிஸாருக்கு யாழில் பற்றாக்குறை!

யாழ்ப்பாணம், ஓக. 10




யாழ். மாவட்டத்தில் பொலிஸ் நிலையங்களில் சிறுவர் மற்றும் பெண்கள் விவகாரங்களைக் கையாள்வதற்கு தமிழ்ப் பொலிஸ் அலுவலர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட மட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் தலைமையில் இடம்பெற்றது. கூட்டத்தில் சிறுவர்கள், பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டன. அதில் தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் கொடிகாமம், சாவகச்சேரி உள்ளிட்ட பொலிஸ் நிலையங்களில் இல்லாமையால் பல்வேறு அசௌகரியங்களை மக்கள் எதிர்நோக்குவதாக சுட்டிக்காட்டப் பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்ப்பாணம் பிராந்தியம், காங்கேசன்துறை பிராந்தியம் என 17 பொலிஸ் நிலையங்களில் 17 ஆண் தமிழ்ப் பொலிஸாரும் 14 பெண் தமிழ்ப் பொலிஸாருமாக மொத்தமாக 31 பொலிஸ் உத்தியோகத்தர்களே காணப்படுகின்றனர். மக்களின் பிரச்சினைகளைக் கையாள்வதற்கு இலகுவாக, அதிகளவு தமிழ்ப் பொலிஸாரை நியமிக்க வேண்டுமென பொது அமைப்புகள் சுட்டிக்காட்டின. (ச-20-125)



# பிறப்புச் சான்றிதழின்றி யாழில் 15 சிறுவர்கள்!

யாழ்ப்பாணம், ஓக. 10

யாழ்ப்பாண மாவட்டத்தில் பிறப்புப் பதிவற்று 15 சிறுவர்கள் உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாண மாவட்ட மட்ட சிறுவர் அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டது.

நீதிமன்ற வழக்குகள் மற்றும் தந்தை - தாய் இடையேயான முரண்பாடு ஆகியவற்றால் பிறப்புப் பதிவை மேற்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அதன்படி கடந்த காலாண்டில் பிறப்புப் பதிவற்ற சிறுவர்களின் எண்ணிக்கை 104 ஆகக் காணப்பட்ட போதும் பல்வேறுபட்ட முயற்சிகளுக்கு பின்னர் 89 பேருக்கு பிறப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டது எனவும் சுட்டிக்காட்டப்பட்டது. (ச-125)

# தனியார் கல்வி நிலையங்கள் பிழையாக வழிகாட்டலாகாது

## மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 10

தனியார் கல்வி நிறுவனங்கள் பெற்றோரைப் பிழையாக வழி நடத்துவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. தேவையற்று பின்னோக்கிச் செல்வதற்கு வழிசமைக்காது முழுமையான ஒத்துழைப்பை அனைத்துத் தரப்பும் வழங்க வேண்டுமென யாழ்.மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சிறுவர் பாதுகாப்பு குழுக்கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

தனியார் கல்வி நிறுவனங்களுக்கு வெள்ளி - ஞாயிறு விடுமுறை நடைமுறைக்கு எதிராக சிலர் பெற்றோரை தூண்டிவிட்டு, கடிதம் எழுத வைத்துள்ளார்கள்.

மாணவர்களின் சிறந்த எதிர்காலத்துக்காகவே வெள்ளி, ஞாயிறு தினங்களில் தனியார் வகுப்புகளில் கற்றல் செயற்பாட்டைத் தடைசெய்யும் நடைமுறை கொண்டுவரப்பட்டது.

இந்தச் செயற்பாடு தரம் - 6 முதல் 9 வரை மட்டுமே நடைமுறைப்படுத்தப்படுகிறது.

எமது எதிர்கால சந்ததியின் நலனைக் கருத்திற் கொண்டு தேவையற்று பின்னோக்கிச் செல்ல வழிகாட்டாது முழுமையான ஒத்துழைப்பை அனைவரும் வழங்க வேண்டும் - என்றார். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சியில் கடும் வறட்சி

# வெப்பச்சாலை நோக்கி கால்நடைகள் இன்னல்

கிளிநொச்சி, ஓக. 10

**கிளிநொச்சியில் தற்போது ஏற்பட்டுள்ள கடும் வறட்சியின் காரணமாக, கால்நடைகள் தண்ணீர் இல்லாமல் அவதியுற்று அலைந்து திரிகின்றன.**





கால்நடைகள் தண்ணீர் இல்லாமல் இறக்கும் நிலை ஏற்படுவதற்குள் மாற்று ஏற்பாடுகள் மூலமாக அவற்றுக்குத் தண்ணீர் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும்என்றுபண்ணையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

'எல் நினோ' தாக்கத்தால் இலங்கையில் தற்போது வரலாறு காணாத வறட்சி ஏற்பட்டுள்ளது. வடக்கிலும் இந்த நிலைமை தீவிரமாகியுள்ளது. குளங்கள் மற்றும் நீர்நிலைகள் வற்றியதன் காரணமாக கால்நடைகள் தண்ணீர் இல்லாமல் அலைந்து திரிகின்றன. ஏற்கனவே கிளிநொச்சியில் மேய்ச்சல் தரைகள் இல்லாமல் கால்நடைகள் பெரும் துன்பத்தை எதிர்கொண்ட நிலையில், தற்போது அவை உயிர் வாழ்வதற்கான தண்ணீர் மூலமும் இல்லாமலாகியுள்ளது. எனவே, பட்டினிச்சாவை கால்நடைகள் எதிர்கொள்வதற்குள் குறைந்தபட்சம் தண்ணீரையாவது அவற்றுக்கு வழங்கி எங்கள் கால்நடைகளையும் அவற்றை மையப்படுத்திய வாழ்வாதாரத்தையும் அதிகாரிகள் காப்பாற்றித் தரவேண்டும் - என்றனர். (ம-113)

## கசிப்பு, கோடா பெண் கைது!

சங்கானை, ஓக. 10

கசிப்பு, கோடா ஆகியவற்றை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண்ணொருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார் என மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரான 41 வயதான பெண்ணிடமிருந்து 5 லீற்றர் கசிப்பு மற்றும் 20 லீற்றர் கோடா என்பன மீட்கப்பட்டன. சந்தேகநபருக்கெதிராக வழக்குப் பதிவு செய்து நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-ரி3-27)

## தண்ணீர்ப்பாதுகாப்பு இல்லாத நிலைமை

### நோய்கள் பெருகும் என்று மருத்துவர்கள் எச்சரிக்கை

நாடளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக எதிர்காலத்தில் நீர் ஆதாரங்கள் மாசடைவதால் வயிற்றுப்போக்கு உள்ளிட்ட நோய்கள் பரவும் அபாயம் காணப்படுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மருத்துவர் சமில் விஜேசிங்க தெரிவித்ததாவது:

'இந்த வறட்சியான காலத்தில், சாதாரண நீர் ஆதாரங்கள் வற்றிக் கிடப்பதால், குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். குறிப்பாக கிராமப்புறம் மற்றும் தொலைதூரப் பகுதிகளுக்குச் செல்லும்போது, இந்த நிலை தீவிரமடைந்து வருகிறது. கிணறு, நீர் ஊற்றுக்கள் உள்ளிட்ட நீர்விநியோக ஆதாரங்களில் இருந்து தண்ணீரைப் பெற முயல்கின்றனர். அவை தற்போது வற்றியுள்ளதால் அசுத்தங்கள் மற்றும் கிருமிகள் இருக்க வாய்ப்பு உள்ளன. எனவே, எதிர்காலத்தில், இந்தத் தண்ணீரை மக்கள் பயன்படுத்தும் போது அவர்களுக்கு வயிற்றுப்போக்கு போன்ற நோய்கள் உருவாகும் அபாயம் உள்ளது. நீங்கள் அருந்தும் தண்ணீர் சுத்தமாக இல்லை என்பதில் உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால், குறைந்தபட்சம் தண்ணீரைக் கொதிக்க வைத்து அருந்தவும் - என்றார். (ம)



## தியாகதீபம் திலீபனின் நினைவிடம் துப்புரவு!

### முன்னணியினர் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஓக. 10

தியாகதீபம் திலீபனின் 36 ஆவது ஆண்டு நினைவுநாள் நெருங்கிவரும் நிலையில் நல்லூரிலுள்ள தியாகதீபம் திலீபனின் நினைவிடத்தைச் சீரமைக்கும் பணியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் கடந்த திங்கட்கிழமை ஈடுபட்டுள்ளனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர்கள் இணைந்து சிரமதானத்தில் ஈடுபட்டனர். (ச-ரி2-66)





தானும் வள்ளி தெய்வானையும் எண்டு தன்ர பாட்டில இருந்த பறாளாய் முருகனுக்கே ஒரு வர்த்தமானியை வெளியிட்டு பேதிகாட்டின பின்னணியில பக்கத்துக் கோயில் ஐயர் இருக்கிறார் எண்டு பட்சி அண்டைக்குச் சொன்னதெல்லோ. அதுக்கு ஆதாரமா இன்னும் சில விசயங்கள் கிடைச்சிருக்கு.

அந்த ஐயர் முந்தி கனவு கண்டிட்டு 'அது நடக்கும், இது நடக்கும்' எண்டு தரிசன நோட்டீஸ் அடிச்சு விடுறவர். தன்ர 12 ஆவது நோட்டீஸ்களோட தமிழீழம் கிடைக்கும் எண்டும் அறிக்கை விட்ட கதையையும் பட்சி சொல்லி இருந்தது. இப்பிடிச் சனத்தைப் பேய்க்காட்டிக் கொண்டு இன்னொரு பக்கத்தால அந்தக் கோயில்ல இருந்த நானூறு, ஐநூறு வருசத்துக்கு முந்தின தேரில இருந்த சிற்பங்களையெல்லாம் அதே ஐயர் தன்ர வீட்ட கொண்டு போட்டார். அதைக் கண்டுபிடிச்சு சனம் கேள்வி கேக்க, 'கள்ளர் கொண்டு போடுவாங்கள் எண்டுதான் தேர்ச் சிற்பங்களைக் கழட்டி வீட்டை வைச்சனான்' எண்டு சொல்லித் தப்பிப் போட்டார். அதெல்லாம் பழைய கதை.

இந்தக் கனவு காணுற ஐயர், இப்பவும் ஏதோ கனவு கண்டிருக்க வேணும், முந்தியெல்லாம் பறாளாய் விநாயகர்தான் இவரின்ர கனவில வாறவர். ஆனால் காலமாற்றமோ என்னவோ இப்ப புத்தரும் சங்கமித்தையும் ஆளின்ர கனவில வந்திருக்கவேணும். கனவு கண்டு முழிச்சதும், ஐயர் நோட்டீஸ் அடிக்கிற பழக்கத்தில தொல்பொருள் திணைக்களத்துக்கும், அமைச்சர்மாருக்கும் மளமளவெண்டு கடிதங்கள் எழுதியிருக்கிறார், 'பறாளாய் முருகன் கோயில்ல நிக்கிற ஆலமரம் சங்கமித்தை வரேக்க நட்டது. அந்த ஆலமரத்துக்கு கீழ விகாரையின்ர இடிபாடுகள், சங்கமித்தை கொண்டந்த புத்த சின்னங்கள் எல்லாம் இருக்கு எண்டு அவர் எழுதின கடிதத்தைப் பார்த்திட்டுத்தான் தொல்லியல் திணைக்களக்காரர் அங்க போயிருக்கினம். அவையையும் கூட்டிக் கொண்டு போய், ஏதோ சங்கமித்தை அரச மரத்தை நடேக்க தான் தான் தண்ணி ஊத்தின ஆள் மாதிரி ஐயர் எப்பிடி சங்கமித்தை வந்தவா, எப்பிடி நட்டவா, என்னென்ன சின்னங்கள் இருக்கு எண்டெல்லாம் சொல்லியிருக்கிறார். கொரோனாக் காலம் எண்ட படியால தொல்லியல் திணைக்களக்காரர் போன விசயம் சனத்துக்கும் தெரியாது. இது ஐயருக்கு வசதியாப் போட்டுது. வாயில வந்ததையெல்லாம் ஆள் அடிச்சுவிட, அந்த வாக்கு மூலத்தை அடிப்படையா வைச்சுத்தான் இந்த வர்த்தமானியே வெளியிடப்பட்டிருக்கெண்டு பட்சிக்கு உறுதியான ஆதாரங்கள் கிடைச்சிருக்கு.

நாங்கள் முதலில போராட வேண்டியது சிங்கள அரசாங்கத்துக்கு எதிரா இல்லை, இவை மாதிரி உள்ளுக்க இருந்தே குழி பறிக்கிற ஆக்களுக்கு எதிராத்தான்.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தத்தை கொண்டுவந்ததும் எதிர்ப்பதும் சிங்களப் பேரினவாதக் கட்சிகளே

## தற்போதும் தடுப்பதும் அவையே: ஜனா எம்.பி. இவ்வாறு ஆவேசம்

கொழும்பு, ஓக. 10

**அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபோது அன்று தமிழர்விடுதலைக் கூட்டணி அதைப் புறக்கணித்தது. சிங்களக் கட்சிகளாலேயே இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. இன்று இந்தத் திருத்தத்தை நடைமுறைப்படுத்த விடாமல் பின் நிற்பதும் சிங்களக் கட்சிகளே என்று நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.**

நாடாளுமன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்கள அரசாங்கமும் பௌத்த சிங்களப் பேரினவாதிகளும் தமக்குத் தேவையெனில் இரு தரப்பு ஒப்பந்தங்களைச் செய்வதில் வல்லவர்கள். அதேபோல அந்த ஒப்பந்தங்களைச் செயற்படுத்தாமல் பின்வாங்குவதில், அதனைக் கிழித்தெறிவதில் அதைவிட வல்லவர்கள் என்பதை நான் மட்டுமல்ல, இந்த நாடு மட்டுமல்ல, சர்வதேசமும் நன்கு அறியும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் சர்வதேச ஒப்பந்த நியமங்களுக்கு உட்பட்ட ஓர் ஒப்பந்தம் என்பதனால், அதனை மீறமாட்டீர்கள் அதன் வழி வந்த 13 ஆவது அரசியல் திருத்தத்தையும் நடைமுறைப்படுத்துவீர்கள் என்று நம்பினோம். ஆனால், ஒப்பந்தக் கடப்பாட்டை மீறுவதில் சர்வதேசத்துக்கே தண்ணீர் காட்டும் திறமையுள்ளவர்கள் என்பதனைக் காட்டிவிட்டீர்கள். 13ஆவது அரசியல் சீர்திருத்தத்தின் ஒவ்வொரு பிரிவும், ஒவ்வொரு வரிகளும், இலங்கையின் பிரிவுபடாத்தன்மையையும் ஒற்றையாட்சித்தன்மையையும் பேணிப் பாதுகாக்கும் வகையிலான ஏற்பாடுகளையே கொண்டுள்ளது. எமது அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் இன்னும் ஒரு வகையில் முக்கியத்துவம் பெறுகிறது. இதுவரை நிறைவேற்றப்பட்ட ஏனைய அரசியல் சீர்திருத்தங்களை விடவும் பெருமை மிக்கது. இலங்கை நாடாளுமன்றத்தில் 6 இல் 5 பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்ட ஒரேயொரு சீர்திருத்தம் இந்த 13ஆவது சீர்திருத்தம். அதில் இன்னுமொரு முக்கியமான விடயம் அரசமைப்பின் 6ஆவது திருத்தத்தால் நாடாளுமன்றத்தில் தமிழர் தரப்பை பிரதிநிதித்துவம் செய்த தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இந்தத் திருத்தத்தில் வாக்களிக்கவில்லை. அப்படியெனில் 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றிய பெருமை முற்று முழுதாக சிங்களப் பேரினவாதக் கட்சிகளையே சாரும். தூங்குபவர்களைத் தட்டியெழுப்பலாம், புரியாதவர்களுக்குப் புரிய வைக்கலாம், அறிவில்லாதவர்களெனின் அறியவைக்கமுடியும். ஆனால், எமது அரசியல்வாதிகள் இவற்றைப் புரிந்து கொள்ளும் பக்குவத்தில் இல்லை. தெரிந்து கொள்ளும் பக்குவத்திலுமில்லை. அறிந்து கொள்ளும் பக்குவத்திலுமில்லை.

ஆனால், இவர்கள். எமது நாட்டின் எதிர்காலத்தோடு விசப்பரீட்சை விளையாட்டு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். மீண்டும் ஓர் ஆறு தசாப்த காலம் எம் நாடு பின்நோக்கிச் செல்வதற்கான முன்னாயத்தங்களை முடுக்கி விட்டுக் கொண்டிருக்கிறார்கள் - என்றார். (ம)

## பொன்னாவெளி சிமெந்துத் தொழிற்சாலை

# 7 ஆவது நாளாகவும் மக்கள் போராட்டம்




கிளிநொச்சி, ஓக. 10

பூநகரி பொன்னாவெளியில் அமைக்கப்படவுள்ள சிமெந்துத் தொழிற்சாலைக்கு எதிரான மக்கள் போராட்டம் 7 ஆவது நாளாகவும் நேற்றுப் புதன்கிழமையும் முன்னெடுக்கப்பட்டது.

பொன்னாவெளியில் சிமெந்துத் தொழிற்சாலைக்கென சுண்ணக்கல் அகழ்வை மேற்கொள்வதற்கு 'டோக்கியோ' சிமெந்து நிறுவனம் அண்மையில் ஆய்வுகளை மேற்கொண்டது.

கடற்கரைக்கு அருகிலுள்ள கிராமங்களில் சுமார் 300 மீற்றர் வரையான ஆழத்தில் சுண்ணக்கல் அகழ்வு மேற்கொள்ளும் போது அதன் விளைவாக கிராமங்களுக்குள் கடல்நீர் உள்வரும் அபாயம் ஏற்படும். அதனால் கிராமங்களை விட்டு மக்கள் வெளியேறவேண்டி நேரிடும். அத்துடன் தொழில்சாலைக் கழிவுகள் காரணமாக மோசமான நோய்த் தாக்கங்களும் ஏற்படும் சூழல் உருவாகும் எனத் தெரிவித்து சிமெந்து நிறுவனத்தின் செயற்பாட்டுக்கு எதிராக அந்தப் பகுதி மக்கள் தொடர்ந்து சுழற்சி முறையில் போராடி வருகின்றனர்.

அதற்கமைய நேற்று வேரவில், வலைப்பாடு, கிராஞ்சி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கவனவீர்ப்பில் ஈடுபட்டு எதிர்ப்பை வெளியிட்டனர். (ச-214)

## மண் அகழ்வு எதிரொலி

# உப்புத் தரவையாகும் பேராபத்தில் இயக்கச்சி

கிளிநொச்சி - இயக்கச்சிப் பகுதியில் தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வால் எமது பிரதேசம் உப்புத் தரவையாக மாறி மக்கள் வாழத் தகுதியற்ற வறட்சியான நிலப்பகுதியாக மாறும் பேரபாயம் ஏற்பட்டுள்ளது என அந்தப் பகுதி மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். கிராமமக்கள் இதுதொடர்பில் மேலும் கூறுகையில். கடல் மட்டத்தில் இருந்து வெறும் ஒன்றரை மீற்றர் உயரம் கொண்டதே இயக்கச்சிப் பிரதேசமாகும். இயக்கச்சி ஆற்றுசம வெளிப் பகுதிகளிலிருந்து தொடர்ச்சியாக மண் அகழப்பட்டு டிப்பர்களில் ஏற்றி வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. ஈழத்திலேயே மிகச்சிறந்த நீர்வளத்தைக் கொண்ட எமது பிரதேசத்தின் நீர்வளம் மண் அகழ்வு காரணமாக தகுதியற்ற உவர் நீர் ப்பிரதேசமாக மாறிவருகிறது. மணல் அகழ்வை உடனடியாகத் தடுக்காவிட்டால் இயக்கச்சி உப்புத் தரவையாக மாறி மக்கள் வாழத் தகுதியற்ற வறட்சியான நிலப்பகுதியாக மாறும் பேராபத்து ஏற்படும். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுத்து எமது பிரதேசத்தை காக்க வழியேற்படுத்த வேண்டும்- என்றனர். (ச-113)

## கண்புரையாளர் தெரிவு

கோப்பாய், உடுவில் ஆகிய பகுதிகளில் கண்புரை சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய தேவையுள்ள நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச கண் பரிசோதனை முகாம் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளது. கோப்பாய் பிரதேச செயலக பிரிவு[illegible]ட்பட்ட நோயாளர்களுக்கு [illegible]ச்சுவேலி பிர[illegible]துவமனையிலும் உடுவில் பிரதேச செயலக [illegible]குட்பட்ட நோயாளர்களுக்கு இணுவில் ஆ[illegible]காதார மருத்துவ பிரிவிலும் நடைபெறவுள்ள[illegible] யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் [illegible]ளர் மருத்துவக் கலாநிதி ஆ. கேதீஸ்வரன் [illegible]துள்ளார். (ச-ரி2-100)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. ஆதாயம் உண்டாகும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செலவுகள் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத் துணையின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன் வழியில் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாளாக அமையும். காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். உறவுகளால் ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியும் உற்சாகமும் பெறுவீர்கள்.

**சிம்மம்:** உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் குடும்பத்தினருடன் சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். வழிபடுவது நலம் தரும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமை அவசியம்.

**துலாம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். திடீர் செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். உறவினர் வருகை உற்சாகம் தரும். வியாபாரம் எதிர்பார்த்தபடி இருக்கும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். உறவுகளால் எதிர்பாராத பணவரவுடன், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படும் நாள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். பிணக்குகள் நீங்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மீனம்:** புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். தாயின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## முதலில் நீங்கள் திருந்துங்கள்

யாழ்.மாவட்டத்தில் கடந்த காலாண்டில் பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய 274 மாணவர்களில் 158 பேர் மீளவும் பாடசாலைகளில் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். நம்பிக்கை தரக்கூடிய, பாராட்டப்பட வேண்டிய செயற்பாடு இது. ஏனெனில் பாடசாலைகளில் இருந்து இடைவிலகும் மாணவர்கள் குழந்தைத் தொழிலாளர்களாக மாற்றப்பட்டு அவர்களது வாழ்க்கையே திசைமாற்றப்படும் அபாயமுண்டு. இல்லாவிடில் சிறுவயதிலேயே போதைப்பொருள், திருட்டு போன்றவற்றில் ஈடுபட்டு, சமூகத்தைச் சீரழிக்கும் குற்றவாளிகளாக மாறிவிடுவர். எனவேதான் எவ்வளவுக்கெவ்வளவு இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கை குறைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு எதிர்காலத்தில் உருவாகக் கூடிய குற்றப் பரம்பரையொன்று இல்லாமற் போய்விடும்.


மாணவர்கள் இடைவிலகலுக்கு குடும்ப வறுமை, இளவயதுத் திருமணங்கள், பெற்றோரின் பொறுப்பின்மை என்பனவே பொதுவான காரணங்களாகச் சொல்லப்படுகின்றன. ஆனால் இதற்குமப்பாலும் இடைவிலகலுக்கான பல காரணங்கள் வெளியே சொல்லப்படுவதில்லை அல்லது சொல்லப்படாமலே மறைக்கப்படுகின்றன. அவற்றில் முக்கியமானது பாடசாலைச் சூழல். எந்தவொரு பிள்ளைக்கும் மனதுக்கிசைவான சூழமைவு இருந்தால்தான் அங்கு கற்கவும், வீட்டில் நிற்காமல் பாடசாலைக்குத் தொடர்ச்சியாகச் செல்லவும் தன்னியல்பான விருப்பம் உண்டாகும். ஆனால் வடக்கில் உள்ள பெரும்பாலான பாடசாலைகள் மாணவர்களுக்கு சித்திரவதைக் கூடங்களாகவே இருக்கின்றன. மாணவர்கள் எதைக்கேட்டாலும் எரிந்து விழுந்து பதில் சொல்லும் ஆசிரியர்கள், மாணவர்கள் பக்க நியாயத்தை சற்றேனும் காதுகொடுத்துக் கேட்க மறுக்கும் நிர்வாகம், அடி உதவுவது போல அண்ணன்தம்பி உதவமாட்டான் என்ற புராணகாலத்து மனோநிலையில் இன்னமும் வன்முறைவழியிலான கற்பித்தலையே பெருமையாக நினைக்கும் பாங்கு, எதற்கெடுத்தாலும் மாணவர்களிடம் பணம் வசூலித்தல் போன்ற பல விடயங்கள் பள்ளிக்கூடம் என்றாலே பல மாணவர்களுக்கு வெறுப்பை உண்டாக்குகின்றன. இந்த வெறுப்பு நாளடைவில் பூதாகரமாகி, ஏதேனும் ஒரு சாட்டைச் சொல்லி பாடசாலைக்குப் போகாமல் வீட்டில் இருக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி, பின்னர் அதுவே தொடர்கதையாகி ஒரு கட்டத்தில் அந்த மாணவர்கள் முற்றாகவே தமக்கும் பாடசாலைக்கும் இடையிலான தொடர்பை சொல்லாமல் கொள்ளாமல் துண்டித்து விடுகின்றனர்.

அண்மைக்காலமாக பாடசாலைகளில் அதிகரித்துவரும் மாணவர்கள் மீதான தண்டிப்புகள் என்ற போர்வையிலான வன்முறைகள், மாணவர்கள் மத்தியில் எதிர்நிலையான மனப்பாங்கையே உண்டாக்கக்கூடியவை. அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டியிருந்தார். 'எல்லாவற்றுக்கும் சட்டம் பார்க்க முடியாது. நான் அதிபராக இருந்த காலத்தில், வன்னிப்பகுதியில் குடும்பச் சூழல் காரணமாக அறுவடைக்காலங்களில் பல மாணவர்கள் பாடசாலைகளுக்கு நாலைந்து நாள்கள் வரமாட்டார்கள். ஆனால் அதற்காக அவர்களைத் தண்டிக்க மாட்டேன். ஏனெனில் அவர்களது குடும்பச் சூழலையும் நாம் பார்க்கவேண்டும். தண்டிப்பதால் அந்த மாணவர்கள் பாடசாலையை விட வயலுக்குச் செல்வதையே தொடரக்கூடும். எனவே சில விட்டுக்கொடுப்புகளை பாடசாலையும் செய்தால் இடைவிலகும் மாணவர் எண்ணிக்கையைக் குறைக்க முடியும்' என்ற சாரப்பட அவர் கருத்து வெளியிட்டிருந்தார். ஆனால், இப்போது பாடசாலை நிர்வாகங்கள் பலவும் மாணவர்நேயத்துடனான இந்த விட்டுக்கொடுப்புகளுக்குத் தயாராகவில்லை.

பரீட்சைகளில் அதிக பெறுபேறு, ஒழுக்கத்தில் மேலதிகாரிகளிடம் நற்பெயர் எடுத்தல் என்று சாதகமான புள்ளிவிவரங்களுக்காக, மாணவர்கள் நலனை நசுக்குவதைத்தான் பெரும்பாலான பாடசாலைகள் செய்கின்றன. அப்படி வெறும் எண் விளையாட்டுகளுக்கு முதன்மை கொடுக்காமல், மாணவர்களின் மனோநிலையை சாதகமானதாக மாற்றி, அவர்களை அரவணைக்கும் நிலையை பாடசாலைச் சூழலில் உருவாக்குவதன் மூலம் எத்தகைய கஷ்டம் வந்தாலும் பாடசாலைக்குச் செல்லவேண்டும் என்ற இயல்பூக்கத்தை மாணவர்களிடம் உருவாக்கமுடியும். எனவே இடைவிலகலுக்கு பெற்றோரையும், வறுமையையும் நோக்கியே கைகாட்டிக் கொண்டிராமல், முதலில் பாடசாலைகள் தம்மைத் திருத்திக் கொண்டாலே இடைவிலகும் மாணவர் எண்ணிக்கையில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியுமென்பதே உண்மை.

### நாளொரு நல்வார்த்தை

''எரியும் விளக்கு இருந்தாலும் அதைக் காண கண்கள் வேண்டும். அதுபோல உதவி செய்யப் பலர் உடனிருந்தாலும் சுயபுத்தி இருப்பது அவசியம்'' – பாரதியார்



# அனைத்துத் தளங்களிலும் மலையகத்துக்கு சமவுரிமை

## சிவில் சமூக அமையம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 10

**அரசியல், சமூகம், பொருளாதாரம், சமயம், சுகாதாரம், கல்வி, பண்பாடு போன்ற அனைத்துத் தளங்களிலும் மலையக மக்கள் தம் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் நிலைமை வரவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது தமிழ் சிவில் சமூக அமையம்.**

இதுதொடர்பில் அந்த அமையம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

இலங்கையின் பொருளாதாரத்தைக் காலனித்துவ ஆட்சியாளர்கள் விரும்பியபடி மாற்றத் தமது வியர்வையையும், குருதியையும் சிந்தினார்கள். காலனித்துவ ஆட்சியாளர்களின் கைகளிலிருந்து சுதேச சிங்கள கைகளுக்கு ஆட்சியதிகாரம் கைமாறிய சுதந்திரம் என்று சொல்லப்படும் நிகழ்வின் பின்னரும் இந்த மக்களின் வாழ்நிலையில் மாற்றம் ஏற்படவில்லை. அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் ஓர் இயந்திரத்தின் 'எரிபொருளாக' மட்டுமே இவர்கள் ஆக்கப்பட்டனர். எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழர்கள் எனும் பண்பாட்டு அடையாளம் கொண்டமை காரணமாக அனைத்து இனக் கலவரங்களிலும், வாழிடங்கள் எரிக்கப்பட்டு, கொல்லப்பட்டு, ஓடஓட விரட்டியடிக்கப்பட்டார்கள். இந்த அடக்கு முறையை, ஒடுக்குமுறையை, இன அழிப்பை 'கைகளைக் கட்டியபடி' ஏற்கும் கட்டாய மனநிலையையும், அரசியல் கலாசாரத்தையும் ஆட்சியாளர்கள் உருவாக்கினார்கள். வடக்கு - கிழக்கில் நடைபெற்ற விடுதலைப் போராட்டம் நசுக்கப்பட்டாலும், அனைவரும் அடிப்படை உரிமைகளுடன் வாழ வேண்டும் எனும் விடுதலைக் கருத்துருவாக்கத்தை ஒரு சிவில் சமூகமாக மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறோம். ஒடுக்கப்பட்ட மக்கள் என்னும் அடிப்படையில் நாங்கள் உங்களோடு இருக்கிறோம் - என்றுள்ளது. (ம)

## தமிழர்களின் தீர்வு தொடர்பில் நாடாளுமன்றமே தீர்மானிக்கும்

### இந்திய ஊடகமொன்றுக்கு மிலிந்த மொரகொட தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 10

13 ஆவது திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி கரிசனை கொண்டுள்ளார். எனினும் தீர்வு தொடர்பில் நாடாளுமன்றமே தீர்மானங்களை எடுக்கும் என்று இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட தெரிவித்தார். இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை இந்தியாவின் பாதுகாப்பை தனது பாதுகாப்பாகக் கருதுகின்றது. நாங்கள் ஒரே இரத்தத்தை கொண்டுள்ளோம்.

13 ஆவது திருத்தம் தொடர்பில் இலங்கை மிகுந்த அர்ப்பணிப்புடன் உள்ளது. ஆனால், தீர்வு தொடர்பில் நாடாளுமன்றமே தீர்மானிக்கும் - என்றார். (ம)

## சினோபெக்கு சிக்கலாம்



கொழும்பு, ஓக. 10

இலங்கையில் எரிபொருளை இறக்குமதி செய்ய விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்ட 'சினோபெக்' நிறுவனத் துக்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களை வழங்குவது சிக்கலாக மாறியுள்ளதாகவும் இதற்கான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுவது இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும் எரிபொருள் விநியோகஸ்தர்கள் தெரிவித்துள்ளனர். (ம)

**நாளை** 11.08.2023 வெள்ளிக்கிழமை ஆடி 26

சுபநேரம் : 06.04 – 07.34
ராகுகாலம் : 10.34 – 12.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை இடைவிலகல்

# 274 மாணவர்களில் 158 பேர் மீளிணைவு

**யாழ்ப்பாணம், ஓக. 10**
**யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த காலாண்டில் 274 மாணவர்கள் பாடசாலை களை விட்டு விலகிய நிலையில், அவர்களில் 158 மாணவர்கள் மீளவும் இணைக் கப்பட்டுள்ளனர்.**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சிறுவர் பாது காப்புக் கூட்டத்திலேயே இந்த விட யம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் யாழ்.பிரதேச செயலர் பிரிவில் 11 மாணவர்கள் இடைவிலகிய நிலையில் அவர்கள் அனைவரும் கல்விக் கட்டமைப்புக் குள் முழுமையாக மீளிணைப்புச் செய்யப்பட்டுள்ளனர். நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் இடைவில கிய 6 மாணவர்களில் 5 மாணவர் கள் மீள இணைக்கப்பட்ட நிலையில் 1 மாணவன் மருத்துவப் பிரச்சினை காரணமாக மீள இணைக்கப்பட வில்லை. கோப்பாய் பிரதேச செய லர் பிரிவில் இடைவிலகிய 29 மாண வர்களுள் 22 மாணவர்கள் மீள இணைக்கப்பட்டுள்ள நிலையில், 7 மாணவர்களின் மீளிணைப்பு இது வரை சாத்தியமாகவில்லை. இது தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரி வில் இடைவிலகிய 8 மாணவர்க ளில் 7 மாணவர்கள் மீள இணைக் கப்பட்டுள்ள நிலையில், ஒரு மாண வன் மீள இணைக்கப்படவில்லை. மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் இடைவிலகிய 24 மாணவர் களுள் அனைவரும் மீளவும் கல் விச் செயற்பாடுகளுக்குள் உள்ளீர்க் கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் இடைவிலகிய 28 மாணவர் களுள் 24 பேர் மீளவும் இணைக் கப்பட்டுள்ளனர். கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் இடைவிலகிய 27 மாணவர்களுள் 22 மாணவர்கள் மீள இணைக்கப்பட்டுள்ளார்கள். தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் இடைவிலகிய 29 மாண வர்களுள் 15 மாணவர்கள் மீள இணைக்கப்பட்டுள்ளனர்.

சங்கானைப் பிரதேச செயலர் பிரி வில் இடைவிலகிய 7 மாணவர்க ளும் மீள முழுமையாக இணைக்கப் பட்டுள்ளார்கள். காரைநகரில் இடை விலகிய 13 பேரில் 11 பேர் இணைக் கப்பட்டுள்ளனர். ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் இடைவில கிய 3 மாணவர்களும் முழுமையாக மீள் இணைக்கப்பட்டுள்ளார்கள். வேலணைப் பிரதேச செயலர் பிரி வில் இடைவிலகிய 10 பேரில் 4 பேர் மீள இணைக்கப்பட்டுள்ளனர். நெடுந்தீவில் இடைவிலகல் பதிவு செய்யப்படவில்லை.

இடைவிலகிய மாணவர்களை மீளி ணைத்தல் சாத்தியப்படாமைக்குரிய காரணங்களும் நேற்றையதினம் ஆராயப்பட்டுள்ளன. இதன்படி இள வயதுத் திருமணம், பெற்றோரின் பொறுப்பின்மை, குடும்ப வறுமை என்பன மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளில் இருந்து விலகிய மைக்கும், மீள இணையாமலுள்ள மைக்கும் முதன்மைக் காரணங்க ளாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இதேவேளை, மீளிணைப்புச் செய் யப்படாத மாணவர்களை மீளி ணைப்புச் செய்வதற்கு உரிய நடவ டிக்கைகளை எடுக்குமாறு யாழ்ப்பா ணம் மாவட்டச் செயலர் அம்பல வாணர் சிவபாலசுந்தரன் துறைசார் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள் ளார். (அ-ம-125)



# வீதியை ஆக்கிரமித்து உலரவிடப்படும் நெல்

## பயணிகள் அசௌகரியம்

கிளிநொச்சி, ஓக. 10
கிளிநொச்சியில் விவசாயிகள் வீதியோரங்களை ஆக்கிரமித்து நெல்லை உலரவிடுவதனால் வீதியால் பயணிப்பதில் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேரிடுகிறது என வாகனச் சாரதிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

கிளிநொச்சியில் இரணைமடுக் குளத்தின் கீழ் மேற் கொள்ளப்பட்ட சிறுபோக நெற்செய்கை தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகிறது. அறுவடை செய் யப்படும் நெல்லை விவசாயிகள் வீதியோரங்களில் பரப்பி உலர விடுகின்றனர். அதனால் வீதியால் பயணிக்கும்போது பெரும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்க நேரிடுகிறது. வீதி விபத்துகளும் சம் பவிக்கின்றன.

விவசாயிகள் பயணிகளுக்கு பாதிப்பேற்படாத வகை யில் நெல்லை உலரவிடுவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்றும் வாகனச் சாரதிகள் சுட்டிக்காட்டு கின்றனர். (ச-113)

# நீர்க்கட்டணம், மின்சாரக்கட்டணம் மாணவர்களிடம் அறவிடலாகாது!

## சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஓக. 10
மின்சாரக் கட்டணம், நீர்க்கட்டணம் உள்ளிட்டவற்றை உயர்த்தியுள்ள அரசாங்கம் அதற்கான கொடுப்பனவுக ளையும் அதிகரிக்க வேண்டும். அதற்காக மாணவர்க ளிடமிருந்து பணம் அறவிட முடியாது. பெற்றோர் இது குறித்து விழிப்பாக இருக்கவேண்டும்.

இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செய லாளர் ஜோசப் ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக் கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் உள்ள பிரபல பாடசாலைகள் சில மின்சாரக் கட்டணம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை ஈடு செய் வதற்காக மாணவர்களிடம் பணம் அறவிடுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசாங்கத்தினால் மாணவர்களுக்கு இலவசக் கல்வி வழங்கப்படும் நிலையில் இந்தக் கொடுப்பனவுகளுக் காக மாணவர்களிடம் பணம் அறவிடுவது சட்டவிரோத மானது.

அரசாங்கம் பாடசாலைக்கு வழங்கும் குடிதண்ணீரின் கோட்டாவை மட்டுப்படுத்தவுள்ளது. அதனால் மாணவர் கள் குடிதண்ணீரைப் பெறுவதில் சிக்கல் ஏற்படும். அதே போன்று மின்சாரக் கட்டணத்தையும் உயர்த்தியுள்ள அரசாங்கம் அதற்கான கொடுப்பனவுகளையும் அதிக ரித்தே ஆகவேண்டும்.

பாடசாலைகள் மாணவர்களிடம் பணம் அறவிடுவது கண்டறியப்பட்டால் உடன் தகவல் தாருங்கள். நடவ டிக்கை எடுப்போம்- என்றார். (ச-27)

# அரிசிக் கையிருப்பு போதியளவு உண்டு

கொழும்பு, ஓக. 10
எதிர்வரும் 6 மாதங்களுக்குத் தேவையான அரிசி கையிருப்பிலுள்ளது. நுகர்வோர் அச்சம் கொள்ளத் தேவையில்லை என ஐக்கிய அரிசி ஆலை உரிமை யாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்தச் சங்கத்தின் தலைவர் வீ.கே ரஞ்சித் தெரிவித்துள்ளதாவது

நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக எதிர்கா லத்தில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என பல்வேறு தரப்பினரிடமிருந்தும் அச்சநிலை ஏற்பட் டுள்ளது.

எதிர்வரும் 6 மாதங்களுக்குத் தேவையான அரிசி கையிருப்பில் உள்ளது. போதுமான அளவு அரிசி கையிருப்பிலுள்ளதால் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்ப டும் நிலை வராது. நுகர்வோர் தேவையற்ற அச்சம் கொள்ளத் தேவையில்லை - என்றார். (ச-ரி2)

# இலத்திரனியல் கழிவகற்றல் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பம்



கிளிநொச்சி, ஓக.10
கிளிநொச்சியில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை யின் இலத்திரனியல் கழிவு களை முறையாகச் சேமிக் கும் நிகழ்ச்சித் திட்டம் கடந்த திங்கட்கி ழமை கரைச்சிப் பிரதேச சபை யில் நடைபெற்றது .

நிகழ்வில் மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன், கரைச்சிப் பிரதேசசபைச் செயலாளர் பி.பத்மகரன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத் தைச் சேர்ந்த மணிமேகலை, சுற்றாடல் அதிகார சபையின் வடமாகாணத்துக்கான பணிப்பாளர் மகேஸ் ஜல்தோட்ட மற்றும் துறைசார்ந்த பதவி நிலை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-ரி2-113)

# கல்மடு நகரில் தொடர்கின்றது காட்டுயானைகள் அட்டகாசம்!

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஓக.10
கண்டாவளை பிரதேச செயலர் பிரி வுக்குட்பட்ட கல்மடுநகர்ப் பகுதியில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது என்று பொதுமக் கள் தெரிவித்தனர்.

காட்டு யானைகளால் தங்கள் வாழ் வாதாரங்கள் அழிக்கப்பட்டு வருகின் றன என்றும், இதுதொடர்பாகப் பல தடவைகள் சுட்டிக்காட்டியும் அதிகாரி கள் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை என்றும் பொதுமக்கள் விச னம் தெரிவிக்கின்றனர். நேற்றுமுன் தினம் இரவும் காட்டு யானைகள் வாழைத்தோட்டம் ஒன்றை முற்றாக அழித்துள்ளன. பயன்தரு மரங்களும் அழிக்கப்பட்டுள்ளன. காட்டுயானை களால் ஏற்படும் பாதிப்புக்களைக் கட் டுப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழில் மிகப்பெரிய சிறுவர் பூங்கா திறப்பு

யாழ்ப்பாணம், ஓக.10

சுயசார்புப் பொருளாதாரத்தை மேம்படுத்தல் மற்றும் வேலை வாய்ப்புகளை வழங்கும் நோக்குடன் வலிகாமம் இளவாலைப் பகுதியில் யாழ். எய்ட் நிறுவனத்தால் அமைக்கப்பட்டுவரும் 'நட்பு மண்' என்னும் பெயரில் சிறுவர்கள் மகிழ்ந்து விளையாடுவதற்கு ஏதுவான வகையில் இயற்கையுடனான சிறுவர் பூங்கா திறந்து வைக்கப்பட்டது.

இது யாழ். மாவட்டத்தின் மிகப்பெரிய சிறுவர் பூங்கா என்பது குறிப்பிடத்தக்கது.

அமரர். சண்முகநாதன் தேசிகனின் ஞாபகார்த்தமாக அன்னாரின் சகோதரனும் யாழ். இந்துக் கல்லூரியின் 95ஆம் ஆண்டு மாணவனுமான சண்முகநாதன் குருபரனின் நிதி அனுசரணையில் நிர்மாணிக்கப்பட்டது.

எதிர்வரும் 28ஆம் திகதிக்குப் பின்னரே பூங்கா முழுமையாக மக்கள் பாவனைக்கு திறந்துவிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-26)

## முதலாம் ஆண்டு நினைவுநாள்

பிறப்பு 27 . 05 . 1941



இறப்பு 07 . 08 . 2022

### நடராசா தங்கம்மா

குடும்பத்தின் குலவிளக்கே அம்மா!
எமை விட்டுப் பிரிந்து ஓராண்டு ஆனாலும்
உங்களுடைய இன்பமுகத்தை காணாமல்
தவிக்கின்றோம் அம்மா!
உங்களுடைய ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்.
**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**

கேணியடி, குப்பிளான்தெற்கு, ஏழாலை. (cs.51566) (N - 1) குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி துரைசிங்கம் அன்னரத்தினம்

மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைசிங்கம் அன்னரத்தினம் நேற்றுமுன்தினம் (08.08.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

**021 221 3225, 077 548 8934, 076 569 2395, 076 257 4941**

## விலைமனுக் கோரல் - சிற்றுண்டிகள் மற்றும் உணவு வழங்குதல்

## 01.09.2023 தொடக்கம் 31.08.2024 வரை

**வலயக்கல்வி அலுவலகம் வவுனியா தெற்கிற்குரிய செயலமர்வு/ விழாக்களுக்கான சிற்றுண்டிகள் மற்றும் உணவு வழங்குவதற்கு தகுதியான/தகைமை வாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடத்துனர்களிடமிருந்து 01.09.2023 தொடக்கம் 31.08.2024 வரையான காலப்பகுதிக்கு வலயக்கல்வி அலுவலக பெறுகைக் குழுவினால் முத்திரையிடப்பட்ட பெறுகைகள் கோரப்படுகின்றன.**

1. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலயக் கல்வி அலுவலகம் வவுனியாவில் கிடைக்கும் கேள்விப்பத்திரம் (Application for Bid Documents') என்ற படிவத்தினைப் பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத பெறுகைக்கட்டணமாக ரூபா 1,000 ஐ காசாக அலுவலக காசாளரிடம் செலுத்தி பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாட்களில் 10.08.2023 தொடக்கம் 23.08.2023 வரையான காலப்பகுதியில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 16.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
2. விலைக்கேள்விகள் 24.08.2023 திகதி மாலை 02.30 மணிக்கு முன்பதாக வலயக்கல்வி அலுவலக வலயக் கல்விப் கல்விப் பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கேள்விநேர முடிவில் (02.30 மணிக்கு) விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
3. தகுதிவாய்ந்த மற்றும் இதில் ஆர்வமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினை அலுவலக நேரங்களில் கணக்காளர் வலயக் கல்வி அலுவலகம் வவுனியா தெற்கு அவர்களின் தொலைபேசி இலக்கத்துடன் 024-2222026 தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
4. கிடைக்கப்பெற்ற விலைக் கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு திணைக்கள பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தலைவர் / வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**திணைக்கள பெறுகைகள் குழு,**
**வலயக் கல்வி அலுவலகம்,**
**வவுனியா தெற்கு.**

(CR/40385)AH-1

## பதினாறாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 14 . 03 . 1947



உதிர்வு 10 . 08 . 2007

### அமரர் அந்தோனிப்பிள்ளை பத்திநாதன்

**(ஓய்வுபெற்ற கிராம அலுவலர், ஊர்காவற்றுறை, பருத்தித்துறை)**

அப்பா!
எம் உணர்வுகளில் ஒலிக்கும்
உயர்ந்த ஓசை
எம் உள்ளத்தை நிறைத்த
அன்பான உறவு, அழகான உறவு
இன்று இறை நிழலில் அமர்ந்து
எமைக் காக்கும் தெய்வம்.

**என்றும் உங்கள் நினைவுகளுடன்**

(CS/25888)AH-1

தனிகை, அல்வாய் வடக்கு, அல்வாய்.

பிள்ளைகள்

## கேள்வி அறிவித்தல் - திருத்தம்

## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை(PSDG) வேலைத்திட்டம்

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,மானிப்பாய்.

மேற்படி விடயம் தொடர்பில், 09.08.2023ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் 12ம் பக்கத்திலும், வலம்புரி பத்திரிகையில் 09ம் பக்கத்திலும் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலின் 6ம், 7ம் பந்திகள் மற்றும் அட்டவணை என்பன பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான பூரணமான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை **தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, யாழ் வீதி மானிப்பாய்** எனும் முகவரியில் 09.08.2023ஆம் திகதியிலிருந்து 22.08.2023ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 09.00 மணிக்கும் மாலை 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2,000.00 இனை (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு ஆவணங்களில் தயாரித்து மூல ஆவணம், நகல் ஆவணம் என தனித்தனி உறைகளிட்டு, **தலைவர்,உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்** எனும் முகவரிக்கு 23.08.2023ஆம் திகதி காலை 10.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

| தொ. இல | வேலை விபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டு தொகை மில்லியன் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கேள்வி செல்லுபடியாகும் காலம் | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவ நிலையத்தில் கட்டடம் மற்றும் கொங்கிறீற் தளம் அமைத்தல் விரிவாக்கல் வேலை – கல்லுண்டாய் NP/14/41(16)/W/PSDG/2023/23 | 5.65 | 98 நாட்கள் | C8,C7 and C6 (கட்டடம்) | 07.11.2023 | 56,600.00 | 05.12.2023 |
| 02 | எரிகொட்டகை அமைத்தல் - கொத்துக்கட்டி இந்துமயானம், நவாலி தெற்கு NP/14/41(16)/W/PSDG/2023/24 | 1.30 | 45 நாட்கள் | C9,and C8 (கட்டடம்) | 10.10.2023 | 13,100.00 | 07.11.2023 |

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.**
**10.08.2023**

(cr.) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருந்தூர்மலை விவகாரம்

# தமிழர்களின் வழிபாட்டை தடைசெய்யவில்லையாம்!

### தொல்பொருள் திணைக்களத்தினர் நீதிமன்றத்தில் இவ்வாறு தெரிவிப்பு



**கொழும்பு, ஓக. 10**

**குருந்தூர்மலையில் தமிழர்களின் வழிபாடுகளுக்கு தொல்பொருள் திணைக்களம் எந்தத் தடைகளையும் ஏற்படுத்தவில்லை. அத்துடன், இனிவரும் காலங்களில் இவ்வாறான வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டால் அதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று தொல்பொருள் திணைக்களத்தினர் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளனர்.**

குருந்தூர்மலை ஆதிசிவன் ஆலயத்தில் தமிழர்கள் அண்மையில் பொங்கலிட்டு வழிபாடுகளை மேற்கொண்ட வேளையில், பௌத்த பிக்குகள் தலைமையிலான சிங்களக் காடையர்களால் இந்த வழிபாடுகள் தடுத்து நிறுத்தப்பட்டதுடன் பல்வேறு அட்டூழியங்களும் அங்கு மேற்கொள்ளப்பட்டன.

இதற்கு எதிராக வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரனால் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அது தொடர்பான வழக்கு விசாரணைகள் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டன. இதன்போதே, தொல்லியல் திணைக்கள அதிகாரிகளால் இவ்வாறு நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## வவு. அரச பண்ணை எவருக்கும் இல்லை!

### வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டு



வவுனியா, ஓக. 10

**வவுனியா அரச விதை உற்பத்திப் பண்ணையை எவருக்கும் கையளிக்கும் தீர்மானம் இல்லை என வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.**

வவுனியா அரச விதை உற்பத்திப் பண்ணை வேறு தேவைகளுக்குப் பயன்படுகிறது.

இந்தச் செயற்பாடு தடுக்கப்பட வேண்டும் என்று கூறி வவுனியா குடிமக்கள் பேரவையால் வடக்கு மாகாண ஆளுநருக்குக் கடிதம் மூலம் தெரியப்படுத்தப்பட்டது.

அந்தக் கடிதத்துக்கு பதிலளிக்கையிலேயே 'வவுனியா அரச பண்ணையை எவருக்கும் கையளிக்கும் தீர்மானம் இல்லை' என ஆளுநர் அறிவுறுத்தியுள்ளார்.

அதன் பிரதிகள் வடக்கு மாகாண காணி ஆணையாளர், வடக்கு மாகாண விவசாயத் திணைக்கள மாகாணப் பணிப்பாளர், வவுனியா பிரதேசசெயலர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (ச-ரி3-18)

## அமெரிக்காவின்

# ஊழல் எதிர்ப்பாளர் நெபிவ் இலங்கைக்கு வருகை!

கொழும்பு, ஓக. 10

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உலகளாவிய ஊழல் எதிர்ப்பு ஒருங்கிணைப்பாளர் ரிச்சர்ட் நெபிவ் கொழும்புக்கு வருகைதந்துள்ளார். அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஊழல் எதிர்ப்பு ஆய்வாளர் டிலானும் அவருடன் இலங்கைக்கு வந்துள்ளார்.

அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தோரையும், சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளையும் தனியார் துறையினரையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

ஊழலை ஒழிப்பதற்கான முயற்சிகள் மற்றும் நாட்டிலுள்ள அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகள் மற்றும் எதிர்கால ஒத்துழைப்புக்கான சாத்தியக்கூறுகள் என்பன தொடர்பில் ஆராய்வதே அவரது வருகையின் நோக்கம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## சீனன்குடா விபத்தில் சாவடைந்தவர்

# 2012 இல் மயிரிழையில் உயிர்தப்பியவர்

கொழும்பு, ஓக. 10

சீனன்குடா பகுதியில் இரு தினங்களுக்கு முன்னர், பயிற்சி விமானமொன்று விபத்துக்குள்ளானதில் இலங்கை விமானப்படை அதிகாரிகள் இருவர் உயிரிழந்துள்ள நிலையில், அவர்களில் ஒருவரான தரிந்து ஹேரத் 2012ஆம் ஆண்டிலும் விமான விபத்தொன்றில் சிக்கியவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டு தும்மலசூரியவில் உள்ள தென்னந்தோப்பில் விமானம் விழுந்து விபத்துக்குள்ளானபோது தரிந்து ஹேரத் பரசூட் உதவியுடன் உயிர் தப்பியிருந்தார்.

இந்த நிலையில் அவர் தற்போது மீண்டும் விபத்துக்குள்ளாகியுள்ளமை அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன.

சீனன்குடா விபத்தில் உயிரிழந்த மற்றொரு அதிகாரியான பெஷான் வர்ணசூரிய, 2017ஆம் ஆண்டில் இலங்கை விமானப்படையில் கடெட் அதிகாரியாக சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் விமான மற்றும் பொறியியல் கிளையில் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## வசதிகளற்ற மைதானங்களில் மாகாண மட்டப் போட்டிகள்

### மாணவர்கள் அந்தரிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 10

வடக்கு மாகாண விளையாட்டுப் போட்டிகள் அடிப்படை வசதிகள் இன்றிய மைதானங்களில் முன்னெடுக்கப்படுவதால் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக மாணவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் கூறுகையில், வடக்கு மாகாண ரீதியிலான பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் பருத்தித்துறையிலுள்ள தனியார் மைதானங்களில் ஒழுங்கமைக்கப்பட்டு கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ளன.

வடக்கின் ஐந்து மாவட்டங்களில் இருந்தும் மாணவர்கள் யாழ்ப்பாணத்தின் பருத்தித்துறைக்கு வந்துள்ளனர்.

ஆனால் அங்கு மலசலகூடம், குடிதண்ணீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏதுமின்றி பெரும் நெருக்கடிக்குள் மாணவர்கள் உள்ளாகின்றனர். குடிதண்ணீர் வசதி அயல் வீட்டிலிருந்தே பெறப்படுகிறது. வறட்சியான தற்போதைய சூழலில் விளையாட்டு மைதானங்களில் குடிதண்ணீர் வசதியின்மையானது ஏற்கமுடியாததொன்றாகும் என்று மாணவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் வடக்குமாகாண விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் ராஜசீலனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

பிரச்சினை தொடர்பில் எமக்கு அறிவிக்கப்பட்டிருந்தால் நாம் நடவடிக்கை எடுத்திருப்போம்.

மாணவர்கள் நீண்டநாள் தங்குதல், அவர்களுடைய செலவுகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு நான்கு மைதானங்களையும் தயார்படுத்தியிருந்தோம். அடிப்படை வசதிகளற்ற மைதானத்தை மாற்றி புதியதொரு பாடசாலை மைதானத்துக்குப் போட்டிகளை மாற்ற ஏற்பாடு செய்துள்ளோம் - என்றார். (ச-27-125)

# கல்வி விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஓக.10

வலிகாமம் கல்வி வலய செயற்றிட்ட அலுவலர் ந. சண்முகராஜாவின் 100 பாடசாலைகளில் இலவசமாக கல்வி விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்ட செயற்றிட்ட கூட்டத்தின் பிரகாரம், இணுவில் இந்துக் கல்லூரியில் கடந்த 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாணவர்களுக்கு கல்வி விழிப்புணர்வுக்கூட்டம் நடத்தப்பட்டது. மேற்படி கூட்டத்தில் வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் யமுனா ராஜசீலன் கலந்து கொண்டு விழிப்புணர்வு உரையாற்றினார். (ய)



# மீரிகமவில் ரயில் விபத்து; ரயில் சேவைகள் பாதிப்பு!

கொழும்பு, ஓக. 10

மீரிகம - வில்வத்த பகுதியில் இடம்பெற்ற ரயில் விபத்தையடுத்து வடக்கு மற்றும் மலையக ரயில் மார்க்கங்களுக்கான ரயில் சேவைகள் பாதிப்படைந்துள்ளன என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

மீரிகம பகுதியில் ரயிலுடன் கொள்கலன் லொறியொன்று மோதி நேற்று புதன்கிழமை காலை விபத்துக்குள்ளாகியுள்ளது.

ரயிலில் மோதிய லொறியின் கொள்கலன் பெட்டி சுமார் 100 மீற்றர் தூரம் இழுத்துச் செல்லப்பட்டு நிறுத்தப்பட்டதால் புகையிரதசமிக்ஞைகள், மின்கம்பங்கள், புகையிரதக் கதவுகள் என்பன பலத்த சேதமடைந்துள்ளன. அத்துடன் ரயிலின் சக்கரங்கள், இயந்திரப்பகுதி என்பனவும் பலத்த சேதமடைந்தன.

அதனால் ரயில் தாமதமாகப் புறப்படுகின்றது என்றும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-ரி2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸ்....

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று விசேட உரை ஒன்றை ஆற்றினார். அதில் 13ஆவது திருத்தம், அதிகாரப் பகிர்வு தொடர்பான தனது யோசனைகளை அவர் முன்வைத்தார். அப்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- நாம் கட்டம் கட்டமாக இதைத் தொடரலாம். நாம் இறுதியில் இருந்து தொடங்காது, ஆரம்பத்தில் இருந்து தொடங்குவோம். முதலில் ஏனைய அதிகாரங்களைப் பரவலாக்குவது தொடர்பாகப் பேசி ஒரு பொதுவான உடன்பாட்டை எட்டுவோம். அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாகத் தென்பகுதி முதலமைச்சர்களின் அறிக்கைகளையும் நாம் அடிப்படையாக எடுத்துக்கொள்ளலாம்.அனைத்து விடயங்களையும் பொது உடன்படிக்கையுடன் செய்வோம். நாட்டின் எதிர்காலத்துக்காக ஒன்றிணைந்து பொதுவான முடிவுகளை எடுக்கும் பலமும், புத்தியும் இந்த நாடாளுமன்றத்துக்கு இருக்கின்றது என்பதைக் காட்டுவோம். எந்த அரசியல் நோக்கங்களும் இன்றி நாட்டுக்குள் நிலையான நல்லிணக்கத்தை உருவாக்குவதற்காக வடக்கு-கிழக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதே எனது நோக்கமாகும். இலங்கையின் அபிவிருத்திக்கு நல்லிணக்கம் அத்தியாவசியமானது.வடக்கு-கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இது தொடர்பில் கலந்துரையாடினேன். அந்தச் சந்திப்புத் தொடர்பாக சபையிலிருக்கும் உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டியது எனது கடமை. அது உத்தேச பயணத்துக்கான தடம் என்றவகையில் அரசாங்கம் அதன் ஊடாக முன்னேறிச் செல்ல எதிர்பார்க்கின்றது. தேசிய நல்லிணக்கத்துக்குத் தேவையான விடயங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக நடவடிக்கைகளை முன்னெடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது-என்றார். (அ-எ-இ)


**யாழ்ப்பாணம் மாநகரசபை**

**நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவகால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் -2023**

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகள் அமைப்பதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளுக்கான விண்ணப்பப் படிவங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.

- கேள்விப்படிவக்கட்டணம் : ரூபா 1,000.00 + Vat 15%
- கேள்விப்படிவம் விநியோகிக்கும் திகதி :- 10.08.2023 தொடக்கம் 17.08.2023 வரை (ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த நாட்களில் மு.ப 9.00 - பி.ப 2.30 மணி வரை)
- கேள்விப்படிவம் விநியோகிக்கும் இறுதித்திகதி :- 17.08.2023 பி.ப 12.30 மணி வரை
- கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் :- 18.08.2023 முற்பகல் 10.00 மணிவரை
- கேள்விப்படிவம் திறத்தல் :- 18.08.2023 முற்பகல் 10.00 மணிக்கு
- தற்காலிக கடைகளுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் ரூபா 2,000.00

விண்ணப்பப் படிவங்கள் யாவும் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு நானாவித இறைவரி பகுதியில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியினுள் 18.08.2023 முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளித்தல் வேண்டும். கேள்வியில் சித்தி பெற்றவர்கள் கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்தி குறிக்கப்பட்ட இடத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக் கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.

கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

(CR/ 40390)AH-1


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 29.06.1944 | விண்ணில் 23.07.2022



## அமரர் வயிரவி செல்லத்துரை

(ஓய்வு பெற்ற கூட்டுறவுப் பரிசோதகர் )

ஆண்டொன்று சென்றது அப்பா
அகிலத்தில் நீங்கள் அகன்று
ஓராண்டு கழிந்தாலும்
ஓவியமாகப் பதிந்திருக்கிறது உங்கள் முகம்
கண்முன்னே நீங்கள் எம்மோடு
வாழ்ந்த காலம் கனவினில் வந்தாலும்
எம்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்
ஆறுதல் சொல்ல ஆயிரம் உறவு இருந்தாலும்
தந்தை உறவு போல் வருமோ இவ்வுலகில்

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

இளவாலை வடக்கு,
இளவாலை

பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

(CS25896)(K-1)

# 31ம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்தி பிரார்த்தனையும்

தோற்றம் 08 . 05 . 1961



மறைவு 12 . 07 . 2023

கடந்த 12.07.2023 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் சிவரஞ்சன் அருள்ராணி

(ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியர் யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி, யா/மட்டுவில் கமலாசினி வித்தி.)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (11.08.2023) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அன்னாரின் இறுதிச்சடங்கில் நேரிலும், தொலைபேசியிலும் கலந்துரையாடி ஆறுதல் தெரிவித்த அன்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, சாவகச்சேரி சிவன்கோவிலடி கலாசார மண்டபத்தில் 12.08.2023 சனிக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ்வறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.**

**குடும்பத்தினர்.**
**074 169 6037 / 077 557 6351**
**077 3065 185**

**புகையிரத நிலைய வீதி,**
**சாவகச்சேரி.**

(CR 40392) A-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 03 . 1940



மறைவு 09 . 08 . 2023

## சோமசுந்தரம் பொன்னம்மா

வேலம்பிராய், நாவற்குழியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் பொன்னம்மா நேற்று (09.08.2023) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சோமசுந்தரம் அவர்களின் பாசமிகு துணைவியாரும், காலஞ்சென்ற விக்கினேஸ்வரன், சிவனேஸ்வரன், குகனேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்திரமாலினி, ராதிகா, காலஞ்சென்ற கோபாலசிங்கம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நிமல்தாஸ், சாந்தா (மலேசியா), லதாயினி - ஜீவரஞ்சன் (பிரான்ஸ்), துஷிதாஸ், ஹரிதாஸ், கஜந்தா (ஆசிரியை, யா/நாவற்குழி மகா வித்தியாலயம்), சாருகன், பானுஜன், விஜிதன் (வரதகாளி சிற்பாலயம்), வஜிதா, லதா (முகாமையாளர் CINEC - Campus-யாழ்ப்பாணம், சட்ட ஆலோசகர், சட்டத்தரணி மாணவி), கௌதமன் (Cluster முகாமையாளர் - HNBA - திருநெல்வேலி), விஜித்தா (முகாமைத்துவ உத்தியோகத்தர், காணித்திணைக்களம், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), சிவரூபன் (முகாமைத்துவ உத்தியோகத்தர், நீதிமன்றம் - கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், பவினேஷ், அஜீஷ், அஸ்மிகா (பிரான்ஸ்), ஹரிஷ், தன்ஜா, செந்தூரி ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், மயில்வாகனம், காலஞ்சென்ற அருளானந்தம், தங்கராசா (கனடா), வன்னியசிங்கம், மங்கையற்கரசி, நாகநாதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற சாந்தகுமாரி, தவமணி, இராசமலர், மனோரஞ்சினி, சறோஜா, துரைராசா, சுசீலாதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிணமுருங்கை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**074 070 7738**

(CS 25900) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் கரைசேர்ந்த வடக்கு மீனவர்கள்

எழுவைதீவில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் மூவர் படகு பழுதடைந்துள்ளதால் தமிழ்நாடு, வேதாரண்யம் கடற்கரையில் கரையொதுங்கியுள்ளனர்.

ஆனைக்கோட்டை, குருநகர் மற்றும் வல்வெட்டித்துறை ஆகிய இடங்களைச் சேர்ந்த மீனவர்கள் கடந்த 6ஆம் திகதி காலை 9 மணியளவில் படகில் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர். பி.ப. 2 மணியளவில் படகு இயந்திரம் பழுதடைந்த நிலையில் தத்தளித்த அவர்கள், தமிழகத்தின் நாகை மாவட்டம், வேதாரண்யம் கடற்கரையில் கரையொதுங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-27)

தரம் 7 மாணவனுக்கு

# ஆசிரியர் தாக்கியதில் வெடித்தது செவிப்பறை

## மாணவன் மருத்துவமனையில்; வட்டு.பொலிஸார் விசாரணை

யாழ்ப்பாணம், ஓக.10

வலிகாமம் வலயத்துக்குட்பட்ட சுழிபுரத்திலுள்ள பிரபல பாடசாலையொன்றில் ஆசிரியரொருவர் மாணவனுக்கு கன்னத்தில் அறைந்ததில் செவிப்பறையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த 31ஆம் திகதி நடந்த இந்தச் சம்பவத்தில் தரம் 7 இல் கற்கும் மாணவனே இவ்வாறு பாதிப்புற்றுள்ளான் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

கடந்த வாரம் மாணவனின் காதிலிருந்து நீர் கசிந்ததை அவதானித்த பெற்றோர், மாணவனை யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்த்தனர்.

மாணவனைப் பரிசோதித்த மருத்துவர்கள் மாணவனின் செவிப்பறை பாதிப்புக்குள்ளாகியமையை உறுதிசெய்தனர். அதனையடுத்து மருத்துவமனைப் பிரிவு வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு தகவல் வழங்கியது. அதற்கமைய சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் குறித்த பாடசாலையின் அதிபரை தொடர்புகொண்டு கேட்ட போது:

பாதிப்புக்குள்ளான மாணவனின் பெற்றோர் கடந்த வெள்ளிக்கிழமையே எமக்குத் தெரியப்படுத்தினர். அதையடுத்து அந்த ஆசிரியரை அழைத்து விசாரித்தபோது, "தான் திட்டமிட்டு மாணவனை தாக்கவில்லையென்றும் சகமாணவர்களுடன் குழப்படியில் ஈடுபட்டவேளை தண்டித்தபோது அந்த மாணவனுக்கு தவறுதலாக அடிபட்டுள்ளது" எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்ட விசாரணைக்கு பாடசாலைக்குழு முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கியது என்றும், மாணவர் பாடசாலைக்கு வழமைபோல வந்து செல்கிறார் எனவும் அதிபர் குறிப்பிட்டார். (அ-ச.27,125)

### ஆசிரியரின்...

மாணவனைத் தாக்கியதில் மாணவனின் முக நரம்பில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

பாதிப்புக்குள்ளான மாணவன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு, சிகிச்சைகளின் பின்னர் வெளியேறியுள்ளார் என்றும், இந்த விடயம் தொடர்பில் இரு தரப்பினரும் மானிப்பாய் பொலிஸார் முன்னிலையில் சமரசமாக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் கேட்டபோது, இவ்வாறு சம்பவம் ஒன்று நடந்தது என்றும், இருதரப்பும் சமரசமாக்கப்பட்டமையையும் உறுதிப்படுத்தினார்.

அண்மைக்காலமாக ஆசிரியர்களால் உடல்ரீதியான பாதிப்பு ஏற்படும் வகையில் மாணவர்கள் தாக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-எ-27)

### கட்டைக்காடு...

முன்தினம் இரவு நடந்த மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மன்னார், முள்ளிக்குளம், மறிச்சுக்கட்டியைச் சேர்ந்த செபமாலை நிரோஜன் (வயது-22) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

கட்டைக்காடு இராணுவ முகாமுக்கு முன்பாக இந்த விபத்து நடந்துள்ளது. வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார்சைக்கிள் வீதியை விட்டு விலகி மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இளைஞனின் சடலம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்துத் தொடர்பான விசாரணைகள் மருதங்கேணிப் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றது. (அ-எ-100)

### பாலியல்...

காப்பற்றப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படும் நிலையில், இது தொடர்பாக முறைப்பாடு ஒன்று கிடைத்துள்ளது என்றும், விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் அல்லைப்பிட்டிப் பிரதேசத்தில் நடந்துள்ளது. அளவுக்கு அதிகமாக மாத்திரைகள் உள்ளெடுத்த 12 வயதுச் சிறுமி ஒருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சைகளின் பின்னர் காப்பற்றப்பட்ட சிறுமி உளவளச் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டபோதே பாலியல் தொந்தரவு காரணமாக இந்த முடிவு எடுத்தேன் என்று கூறியுள்ளார்.

அல்லைப்பிட்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயது இளைஞர் ஒருவர் ஆபாசக் குறுந்தகவல்களை அனுப்புகிறார் என்றும், தவறான தொடுகைகளை மேற்கொள்கின்றார் என்றும் சிறுமி கூறியுள்ளார். இது தொடர்பாக மருத்துவமனை ஊடாகப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் கேட்டபோது, இது தொடர்பாக முறைப்பாடு கிடைத்துள்ளது. சிறுமி பாலியல் ரீதியான தொல்லைக்குட்படுத்தப்பட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன - என்றார். (அ-எ-125)

### பொலிஸ்...

அவர்கள் அரசுக்கு எதிராகப் போராடுவார்கள் என்று நம்பவில்லை. தமிழ் இளைஞர்களை பொலிஸ் சேவையில் இணைத்தால் அவர்கள் பொலிஸ் திணைக்களத்துக்கு விசுவாசமாகவே செயற்படுவார்கள். இப்போது அவ்வாறுதான் செயற்படுகின்றனர்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரட்ண.

இலங்கைத் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸுக்கும் இடையே நேற்று நடைபெற்ற சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேற்றைய சந்திப்பில் பொலிஸ் அதிகாரங்கள் தமிழர்களுக்கு - வடக்கு, கிழக்குக்கு ஏன் தேவை?, இப்போதைய பொலிஸ் அமைப்பைத் தொடர்வதில் உள்ள சிக்கல் என்ன என்பது தொடர்பில் அறிவதற்கு அமைச்சர் டிரான் ஆர்வம் காட்டியுள்ளார்.

ஏனைய அதிகாரங்கள் இருந்தாலும், பொலிஸ் அதிகாரம் இல்லாவிட்டால் ஏனைய அதிகாரங்களை மாகாண முதலமைச்சரால் பிரயோகிக்கவோ, தீர்வு காணவோ முடியாது போன்ற நிர்வாக ரீதியான சிக்கல்களை தமிழ்த் தரப்பினர் விளக்கமளித்தனர்.

13 ஆவது திருத்தத்தின்படி [illegible] ஆணைக்குழுவில் [illegible] முதலமைச்சர் நியமிக்க முடியும் என்றும், ஏனைய இருவரையும் மத்திய அரசே நியமிக்க முடியும் என்றும் சுட்டிக்காட்டினர்.

மாகாணங்களுக்குப் பொலிஸ் அதிகாரத்தை வழங்குவதால் அவர்கள் அரசுக்கு எதிராகப் போராடுவார்கள் என்று சந்தேகிக்கின்றீர்களா? என்று ஒரு சந்தர்ப்பத்தில் தமிழ்த் தரப்பினர் கேட்டபோது, தான் அப்படி நம்பவில்லை என்று கலந்துரையாடலில் பங்கேற்றிருந்த பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

இலங்கை பொலிஸ் வரலாற்றில் ஆரம்பகாலத்தில் பல தமிழ்ப் பொலிஸார் கடமையில் இருந்தாலும், பா.நடேசன் ஒருவர் மட்டுமே புலிகளுடன் இணைந்து அரசுக்கு எதிராகப் போராடினார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-எ-இ)

### புலிபாய்ந்தகல்லில்...

பான்மையின மீனவர்கள் அனுமதியின்றி அமைத்த வாடியை அகற்ற வேண்டும் என்று அந்தப் பகுதி கிராம அலுவலரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

புலிபாய்ந்தகல் பகுதியில் சிங்கள மக்களைக் குடியேற்றும் முயற்சிகள் இரகசியமாக மேற்கொள்ளப்படுகின்றன என்று தகவல் வெளியாகியிருந்த நிலையில், கொக்குத்தொடுவாய் கடற்றொழில் சங்க அங்கத்தவர்களும், நாயாறு கடற்றொழில் சங்க நிர்வாகத்தினரும் (செம்மலை கிழக்கு) நேற்றுமுன்தினம் நேரில் சென்று பார்வையிட்டனர். நேற்றும் அங்கு புதிதாக வாடி ஒன்று அமைக்கப்படுகின்றது என்று கூறப்பட்ட நிலையில் மீனவர் சங்க உறுப்பினர்களும், கொக்குத்தொடுவாய் கிழக்குக் கிராம அலுவலரும், வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரனும் அங்கு சென்று ஆராய்ந்தனர்.

அப்போதுஅந்த இடத்துக்கு 18க்கும் மேற்பட்ட பெரும்பான்மையின மீனவர்கள், நான்கு படகுகளுடன் தொழில் செய்ய வந்துள்ளனர். அவர்கள் கடற்றொழில் திணைக்களத்தால் வழங்கப்பட்ட கடிதம் ஒன்றைக் காண்பித்துள்ளனர். அந்தக் கடிதத்தில் 4 படகுகளுக்கு மீன் பிடிக்க அனுமதி வழங்கக் கோரி பரிந்துரை செய்யப்பட்டு, முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளரால் பிரதேச செயலருக்குக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. ஆயினும் பிரதேச செயலரால் இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை.

பிரதேச செயலரின் அனுமதி இன்னமும் வழங்கப்படாத நிலையில், அங்கு வாடி அமைக்க முடியாது என்ற விடயம் தெளிவுபடுத்தப்பட்டு, புதிதாக அமைக்கப்பட்ட வாடியை அகற்றவேண்டும் என்று கிராம அலுவலர் அவர்களுக்கு அறிவுறுத்தினார். அகற்றாவிட்டால் அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன், இது ஒரு குடியேற்ற முயற்சி என்று குறிப்பிட்டார்.

"நாம் அங்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்தோம். மீனவர் பிரதிநிதிகள், அங்கு தொழில் செய்யும் மீனவர்கள் எனப் பலதரப்பினருடன் கலந்துரையாடினோம். 150 படகுகளுடன் மீனவர்கள் அங்கு வரவுள்ளனர் என்று கூறுகின்றனர். வாடிகள் அமைப்பதற்குத் தேவையான பொருள்கள் அங்கு வந்துள்ளன. சில நாள்களுக்கு முன்னர் அந்த இடங்களைப் பார்ப்பதற்கு பௌத்த பிக்கு ஒருவர் தனது குழுவினருடன் வந்து சென்றுள்ளார்" என்றும் அவர் தெரிவித்தார். (அ-எ-இ)

### வன்முறைக்...

அட்டகாசம் செய்த நிலையில், அதைத் தடுக்கச் சென்ற புலனாய்வுத் துறை உத்தியோகத்தர் மீதும் அந்தக்குழு தாக்குதல் நடத்த முயன்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று மாலை வைரவப் புளியங்குளம், யங்ஸ்ரார் விளையாட்டு மைதானம் முன்பாக நடந்துள்ளது.

மைதானத்தின் முன்பாக வீதியில் நின்ற சில இளைஞர்கள் மீது, மோட்டார் சைக்கிள்களில் வந்த சிலர் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்த முயன்றுள்ளனர். பின்னர் அந்தப் பகுதியில் வாள்களுடன் நின்று அட்டகாசம் செய்துள்ளனர்.

இதனால் வீதியால் பயணித்த மாணவர்கள், பெற்றோர், மக்கள் அச்சத்துடன் சிதறியோடினர். சம்பவத்தையறிந்து, அந்தப்பகுதிக்கு வந்த புலனாய்வுத்துறை உத்தியோகத்தர் ஒருவர் அந்த இளைஞர்களைக் கட்டுப்படுத்த முயன்றபோது, அவர் மீதும் தாக்குதல் நடத்த முயற்சிக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து, அந்தப் பகுதிக்கு பொலிஸார் வந்தபோது, வாள்களுடன் நின்று அட்டகாசம் செய்த இளைஞர்கள் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியாப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணிகள்...

அதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்களுக்கு(அரசியல் கைதிகளுக்கு) பொது மன்னிப்பு வழங்குவது தொடர்பாகவும் ஆராயப்படுகின்றது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று விசேட உரை ஒன்றை ஆற்றினார். அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

2009ஆம் ஆண்டு இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்ட காணிகளில் 92 வீதமான காணிகள் ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளன. பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸாரால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளின் தற்போதைய அளவு 3 ஆயிரத்து 754 ஏக்கராகும்.

அந்தக் காணிகளைக் கீழ்வரும் பிரிவுகள் ஊடாக விடுவிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

இராணுவம் மற்றும் கடற்படையினரால் அடையாளம் காணப்பட்டுள்ள யாழ்ப்பாணத்தில் 1.4 ஏக்கர், கிளிநொச்சியில் 13 ஏக்கர் மற்றும் முல்லைத்தீவில் 20 ஏக்கர் காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட உள்ளன.

யாழ்ப்பாணத்தில் 3 முதல் 6 மாதங்களுக்குள் விடுவிக்கப்பட வேண்டிய காணிகள் தொடர்பில் இராணுவத்தால் அடையாளங் காணப்பட்டுள்ளது.

பலாலி இராணுவ முகாமில் இருந்து சுமார் 290 ஏக்கர் காணி விவசாயம் மற்றும் பருவகாலப் பயிர்கள் உள்ளிட்ட குறிப்பிட்ட நோக்கங்களுக்காகத் தற்காலிகமாக விடுவிக்கப்படவுள்ளது.

இராணுவத் தளபதியின் பணிப்புரையின் பேரில் வடமாகாணத்தில் தற்போதும் விடுவிக்க முடியாத காணிகளை விடுவிப்பது தொடர்பிலான சாத்தியக்கூறுகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளன.

இந்தவிடயம்வடக்குமக்களிடத்தில்கருத்து வேறுபாடுகளை தோற்றுவிக்கும் விவகாரம் என்பதை நான் அறிவேன். வடக்கு மாகாணத்தில் படையினரால் கையகப்படுத்தப்பட்ட மக்கள் காணிகளை முடிந்த வரையில் விடுப்பதே எனது நோக்கமாகும்.

மறுபுறம் வடக்கு - கிழக்கின் ஒவ்வொரு மாவட்டத்திலும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகள் தொடர்பில் காணிப் பயன்பாட்டு வரைபடங்கள், தற்போதைய காணிப் பாவனை முறைகள் மற்றும் பிரதேச செயலாளர்களின் முன்மொழிவுகளை மையப்படுத்தி தரவுக் கட்டமைப்பொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

மாவட்டங்களுக்குரிய தகவல்களைப் பிரதேச செயலகங்கள் ஊடாகப் பெற்றுக்கொள்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 2 மாதகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்குவது தொடர்பாகவும் ஆராயப்படுகின்றது.

விளக்கமறியலில் இடப்பட்டவர்கள் 21 பேர், மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் 3 பேர், சிறைத் தண்டனைக் கைதிகள் 22 பேர் என்ற மூன்று பிரிவுகளின் கீழ் கைதிகள் உள்ளனர். அரசமைப்பின் 34(1) சரத்துக்கு அமைய இறுதி இரண்டு பிரிவுகளிலும் உள்ள கைதிகளுக்கு மட்டும் பொது மன்னிப்பு வழங்குவது தொடர்பாக ஆராயப்படவுள்ளது - என்றார். (அ-எ-இ)

## பறாளாய்க்...

சச்சிதானந்தன் தெரிவித்துள்ளதுடன், அதற்குச் சான்றாக நூல் ஒன்றையும் குறிப்பிட்டுள்ளார்.

சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயத்தில் உள்ள அரச மரம் தொல்பொருள் சின்னமாக அறிவிக்கப்பட்டு வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளதுடன், அது சங்கமித்தையால் கொண்டுவரப்பட்ட அரச மரம் என்று அரசாங்கத்தால் கூறப்படுகின்றது. இது தமிழ் மக்களின் தொன்மைமிக்க வழிபாட்டிடமான பறாளாய் முருகன் ஆலயப் பிரதேசத்தை பௌத்த மயமாக்கும் உள்நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்டுள்ள முயற்சி என்று தமிழ் மக்கள் குற்றஞ்சாட்டுவதுடன், அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்குக் கடும் எதிர்ப்பையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

நேற்று நாடாளுமன்றத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பறாளாய் முருகன் கோவிலில் உள்ள அரச மரம் சங்கமித்தை நட்ட மரமாக இருக்காது என்பது தனது அபிப்பிராயம் என்று கூறியிருந்தார்.

இந்தநிலையில், இலங்கை சிவசேனையின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன், சிவசேனை ஊடகக் குழுவில் பதிவொன்றைப் பதிந்துள்ளார்.

97 ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்த சீ.இராசநாயகம் எழுதிய நூல் ஒன்றில் பறாளாய் முருகன் ஆலய வளாகத்தில் உள்ள அரச மரம் சங்கமித்தையால் கொண்டுவரப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள மறவன்புலவு சச்சிதானந்தன், அந்த நூலின் படத்தையும் சேர்த்துள்ளார்.

ஆயினும் இந்த ஆலயம் 1789 இல் கட்டப்பட்டபோது, ஆலய உறுதியில் இந்த அரசமரம் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. உறுதியில் இல்லாத அரசமரத்தை சீ.இராசநாயகம் எவ்வித அடிப்படை ஆதாரங்களுமின்றி எழுதியதை வைத்து, பௌத்தமயமாக்கலுக்கு மறவன்புலவு சச்சிதானந்தன் வால்பிடிப்பது பலருக்கும் விசனத்தை உண்டாக்கியுள்ளது.

அண்மைக்காலமாக வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட பௌத்தமயமாக்கல் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. அதற்கு எதிராகப் பல்வேறு போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் பேரினவாதிகளின் திட்டமிட்ட பௌத்தமயமாக்கலுக்கு ஆதரவான வகையில் இலங்கை சிவசேனையின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் வெளியிட்டுள்ள கருத்து மக்கள் மத்தியில்பெரும் விசனத்தைஏற்படுத்தியுள்ளது.

அதேவேளை, குருந்தூர்மலையில் நீதிமன்றக் கட்டளையை மீறி சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரைக்குச் சென்று இலங்கை சிவசேனையின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் வழிபாடுகளை மேற்கொண்டிருந்தமையும் விமர்சனங்களை ஏற்படுத்தியிருந்தது. (அ-எ)

## அரச மரத்தை...

தாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளாரென ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியினர் குறிப்பிட்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை, ஜனநாயகதமிழ்த்தேசியக்கூட்டணியின் இணைத் தலைவர்களான த.சித்தார்த்தன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் இருவரும் நாடாளுமன்றத்தில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது பறாளாய் முருகன் ஆலயத்திலுள்ள அரச மரம் சங்கமித்தையால் நடப்பட்டது எனக் குறிப்பிட்டு வர்த்தமானி வெளியிடப்பட்ட விவகாரம் சுட்டிக்காட்டப்பட்டது.

பறாளாய் முருகன் கோவிலில் வரலாறு சுமார் 300 ஆண்டுகளுக்குட்பட்டது எனக் குறிப்பிட்டு சம்பவத்தின் பின்னணியையும் வரலாற்றுச் சுருக்கத்தையும் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் விளக்கமளித்தார்.

இந்த விவகாரத்தில் 2 உண்மைகளில் ஒன்றை ஏற்றுக்கொள்ளவேண்டுமென ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியினர் ஜனாதிபதியிடம் கோரினர்.

இந்த மரம் 300 வருடங்கள் பழமையானது என்றால் சங்கமித்தை இலங்கைக்கு 300 வருடங்களின் முன்னரே வந்தார், பௌத்தம் 300 வருடங்கள் மாத்திரமே பழமையானது என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் அல்லது இந்த மரம் சங்கமித்தை நட்ட மரமல்ல என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டனர்.

பறாளாய் முருகன் கோவிலில் உள்ள அரச மரம் சங்கமித்தை நட்ட மரமாக இருக்காது என்பது தனது அபிப்பிராயம் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, போர்த்துக்கேயர் இலங்கையை ஆண்டபோது நட்டிருந்த அரச மரங்களை எல்லாம் அழித்து விட்டதாகத் தெரிவித்தார்.

மரத்தின் ஆயுட்காலத்தை அளவிடும் பரிசோதனை மேற்கொள்ள உத்தரவிடுவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னரா வர்த்தமானி வெளியிடப்பட்டது? என ஜனாதிபதியிடம் கூட்டணியினர் கேள்வி எழுப்பினர். அப்படியான பரிசோதனை எதுவும் மேற்கொள்ளாமல் அது சங்கமித்தை நட்ட மரம் என்ற முடிவுக்கு எப்படி தொல்லியல் திணைக்களம் வந்தது? எனவும் கேள்வி எழுப்பினர். இதன் மூலம் அந்த வர்த்தமானி இனவாத நோக்கமுடைய சட்டபூர்வமற்ற வர்த்தமானி என்பது புலப்படுகிறது என்பதையும் சுட்டிக்காட்டினர்.

இதனை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, தொல்லியல் திணைக்களம் எந்த விஞ்ஞானபூர்வ நடைமுறைகளையும் கடைப்பிடிக்காமல் எப்படி வர்த்தமானி வெளியிட்டார்கள் என்பது தொடர்பில் உடனடி விசாரணை நடத்தி, அறிக்கை சமர்ப்பிக்க தனது செயலர் சமன் எக்கநாயக்கவுக்கு உத்தரவிட்டுள்ளார். (அ-ஓ.5,125,27)

## ரணிலின்...

முன்வைத்துள்ளபோதும், அரசாங்கத்தின் பக்கமுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவருக்கு ஆதரவளிக்கின்றார்களா என்ற சந்தேகம் எமக்கு இருக்கின்றது. அதை நாம் தெரிந்துகொள்ள விரும்புகின்றோம்.

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட உரையொன்றை ஆற்றிய நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஆகியோருக்கு ஒன்றைக் கூறுகின்றேன். தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இதுதான் சரியான தருணம்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அரசாங்கத் தரப்பின் பிரதம கொறடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச சார்பாகப் பேசுவதாகக் கூறினார். மஹிந்த ராபஜக்ச '13 பிளஸ்' தொடர்பாகப் பேசினார் என்று சுட்டிக்காட்டினார். மஹிந்த ராஜபக்ச '13 பிளஸ்' என்ற நிலைப்பாட்டிலேயே இப்போதும் உள்ளார் என்பதையே பிரசன்ன ரணதுங்க கூறினார் என்று நினைக்கின்றேன். நாடாளுமன்றத்தில் இருந்த மஹிந்த ராஜபக்சவும் அதை மறுக்கவில்லை. எப்போதும் ஒரே நிலைப்பாட்டிலேயே இருங்கள்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று குறிப்பிட்டார். ஆம், இப்போது அதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கின்றது. வழமையாக பச்சைக் கட்சி பிரச்சினைக்குத் தீர்வுகாண முயலும்போது, நீலக் கட்சி அதை எதிர்க்கும். நீலக் கட்சி பிரச்சினைக்குத் தீர்வு காண முயலும்போது பச்சைக் கட்சி எதிர்க்கும். இப்போது அவ்வாறு இல்லை. வரலாற்றில் முதற்றடவையாக எதிர்க்கட்சி பிரச்சினைத் தீர்வு முயற்சிகளுக்கு ஆதரவளிக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

13ஆவது திருத்தம் தொடர்பாக நாம் பேசுவோம். அதிலுள்ள அதிகாரங்கள் தொடர்பாகப் பேசுவோம். 13ஆவது திருத்தம் அரசமைப்பில் உள்ள ஒரு சட்டம். எதிரணியில் உள்ள சிலர் கருத்துக்களை முன்வைத்தனர். அவர்களுக்கு ஒன்றைக் கூறுகின்றேன். எந்தக் காலத்திலும் 13ஆவது திருத்தத்தையோ, மாகாண சபையையோ இலங்கை அரசமைப்பில் இருந்து அகற்ற முடியாது - என்றார். (அ-எ)

## சிங்கள...

தரப் பிரஜைகளா? அவர்களின் பிரதிநிதிகளுடனும் ஜனாதிபதி பேச்சு நடத்த வேண்டும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கு - கிழக்கு மாகாண தமிழ்ப் பிரதிநிதிகளுடன் மட்டுமே ஜனாதிபதி பேச்சு நடத்தினார். முஸ்லிம் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் கேட்கின்றார்.

வடக்கு - கிழக்கில் இரு இனங்கள் மட்டுமே உள்ளனவா? யாழ்ப்பாணத்தில் திஸ்ஸ விகாரைக்கு எதிராக 25 பேர் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். குருந்தூர்மலையில் பிரச்சினைகள் உள்ளன. வடக்கு - கிழக்கில் சிங்கள மக்கள் இல்லையா? அங்குள்ள சிங்கள மக்கள் இரண்டாம் தரப் பிரஜைகளா? வடக்கு - கிழக்கில் உள்ள அனைத்துத் தரப்பினருடனும் பேச்சு நடத்தவேண்டும் - என்றார்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தக் கோரிக்கையை இப்பொழுதுதானே வைக்கிறீர்கள். அவர்களுடனும் பேச்சு நடத்துவோம் - என்றார். (அ-எ-இ)

## அக்கரை...

நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று மாலை 6 மணியளவில் நடந்துள்ளது.

தொண்டைமானாறு, கெருடாவிலைச் சேர்ந்த கந்தசாமி சிவராசா (வயது-75) என்பவரே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். நீரில் மூழ்கி உயிரிழந்தவரின் உடல் நேற்று இரவு மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் அச்சுவேலிப் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றன. (எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பூர்வீக மரபழிப்பு அதிஉச்ச ஆக்கிரமிப்பே!

## வர்த்தமானியை மீளப்பெறுக சிறீதரன் எம்.பி. ஜனாதிபதிக்குக் கடிதம்

கிளிநொச்சி, ஓக. 10

தேசிய இனங்களுக்கிடையிலான முரண்பாட்டு நிலையை வலுப்படுத்தும் வகையில் - இனத்துவ அடிப்படையிலான சிந்தனைகளைத் தூண்டும் நோக்கோடு தமிழர்களது பூர்வீக நிலங்களை, புராதன நினைவுச் சின்னங்களாக வெளிப்படுத்தியுள்ளமை எமது மண்ணை வலிந்து ஆக்கிரமிப்புச் செய்வதன் அதிஉச்சமான வெளிப்பாட்டு வடிவமேயாகும். தமிழர்களது மரபார்ந்த அடையாளங்களை ஆக்கிரமிக்கும் வகையில் வெளியிடப்பட்ட இந்த வர்த்தமானி அறிவித்தல்கள் மீளப் பெறவேண்டும்.

- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், ஜனாதிபதிக்கும், துறைசார் அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவுக்கும் தனித்தனிக் கடிதங்கள் அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது:

பறாளாய் முருகன் ஆலயம் உள்ளிட்ட வர்த்தமானி அறிவித்தலில் குறித்த நான்கு இடங்களும் இன்றளவும் முறைசார் பூஜை வழிபாடுகள் இயற்றப்படும் தமிழ் மக்களுடைய புராதன மதவழிபாட்டுத் தலங்களாகப் பேணப்பட்டு வருகின்றன.

பறாளாய் முருகன் ஆலய பரிபாலனசபையிடமுள்ள 1786 ஆம் ஆண்டு எழுதப்பட்ட காணி உறுதியில் ஆலய வளாகத்துக்குள் அரச மரம் இருப்பதாக குறிப்பிடப்படவில்லை. வெறுமனே 200 ஆண்டுகளுக் குட்பட்ட பழமையுடைய அந்த அரசமரத்தை சுமார் 2300 ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்ததாக மகாவம்சம் கூறும் சங்கமித்தையின் வருகையோடு பொருத்திக் கூறுவதென்பது வரலாற்றுத்திரிபை ஏற்படுத்தும் அப்பட்டமான பொய்மை நிறைந்த கருத்தாகும்.

ஏற்கனவே, குருந்தூர்மலை, வெடுக்குநாறிமலை, நெடுந்தீவு வெடியரசன் கோட்டை முதல் உருத்திரபுரம் சிவன்கோவில், மயிலத்தமடு மாதவனை, கச்சல் சமளங்குளம் ஈறான நூற்றுக்கணக்கான இடங்கள் தொல்பொருள் எனும் போர்வையில் வலிந்து அபகரிக்கப்பட்டு, பௌத்த விகாரைகள் கட்டியெழுப்பப்படுகின்றன.

தொல்லியல் திணைக்களத்தினதும் அண்மைக்கால ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள், போரியல் வாழ்வின் இழப்புகளிலிருந்து மீண்டெழ முடியாத நிலையில் வாழும் ஈழத்தமிழர்களை மேலும் மேலும் பாதிப்புக்குள்ளாக்குவதாகவே அமைந்துள்ளன.

எனவே எமது மக்களை உணர்வுரீதியான நெருக்கீடுகளுக்கு ஆளாக்கி இனத்துவ அடிப்படையிலான சிந்தனைகளைத் தூண்டும் செயற்பாடுகளைத் தவிர்க்கவேண்டும். தமிழர்களது பூர்விக நிலங்களை வலிந்து ஆக்கிரமிப்புச் செய்வது நிறுத்தப்பட வேண்டும். இரு தேசிய இனங்களுக்கிடையிலான முரண்நிலைகளை மேலும் வலுப்படுத்தாது எங்களுடைய வழிபாட்டுரிமைகளுக்கேனும் மதிப்பளிக்க வேண்டும். - என்றுள்ளது. (ச-113)

## நான்யார்? கேட்கிறார் ரணில்

வடக்கு - கிழக்கு மக்கள் அதிக துயரப்படுகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். நான் இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென உண்மையாகவிரும்புகிறேன். சிறீதரன் என்னைச் சிங்கள இனவாதி என்கிறார். அத்துரலிய ரத்ன தேரர் என்னைத் தமிழ் மக்களின் ஆதரவாளர் என்கிறார். நான் யார்? என நாடாளுமன்றத்தில் சுவாரஸ்யமாக கேள்வியெழுப்பினார் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க.

நாடாளுமன்றத்தில், 13 ஆவது திருத்தம் தொடர்பில் நேற்று புதன்கிழமை ஜனாதிபதி உரையாற்றினார். இதன் பின்னர் உரையாற்றிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், 13 ஆவது திருத்த விவகாரத்தை குழப்பமடைய வைப்பதில் ஜனாதிபதி வெற்றிபெற்றுள்ளார். இங்கு உரையாற்றியவர்களின் கருத்துகளில் இருந்து அது தெரிகிறது. இனப்பிரச்சினை தீர வேண்டுமென எத்தனை சிங்களத் தலைவர்கள் விரும்புகிறார்கள். 13 ஆவது திருத்த விவகாரத்தை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வந்து, ஜனாதிபதி குழப்பியுள்ளார். சிங்கள இனவாதிகள் தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்கமாட்டார்கள்தீர்வும் இல்லை, தேர்தலும் இல்லை என்று தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த போதே, ஜனாதிபதி மேற்படி கேள்வியெழுப்பினார். (ம)

## தொழிற்சந்தை

மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட நிலையத்தால் பட்டதாரிகள் மற்றும் ஏனைய தகைமை உடையோருக்கு தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் தொழிற்சந்தை நடத்தப்படவுள்ளது. எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். மாவட்டச் செயலக வளாகத்தில் இந்தத் தொழிற்சந்தை இடம்பெறவுள்ளது. ஆட்சேர்ப்பு வெற்றிடமுள்ள நிறுவனங்கள் மாவட்டத்தொழில் நிலையத்துடன் நேரடியாகவோ அல்லது 0212219359 என்ற அலுவலக தொலைபேசி இலக்கத்தினூடாகவோ தொடர்பு கொள்ள முடியும் என யாழ்.மாவட்டச் செயலர் அறிவித்துள்ளார். (ச-ரி-3)


### தேவை

அரைக்கும் ஆலை அனுபவம் உள்ளவர்கள். கூலி ஆட்கள் (ஆண்/பெண்). மில் உபகரணங்கள்.
கொப்பறா. 077 77 222 15

### பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

அச்சுவேலியில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு பகல் இரவு பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.
தொடர்புக்கு : 077 777 5068

### வேலையாள்கள் தேவை

மிக்ஷர் கம்பனி ஒன்றுக்கு பொதிசெய்வதற்கு அனுபவம் உள்ள, அனுபவம் அற்ற (ஆண், பெண் இருபாலாரும்) வேலையாள்கள் தேவை.
071 380 6808

### விற்பனையாளர் தேவை

அச்சுவேலியில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு விற்பனையாளர் (Sales Rep)தேவை.
தொடர்புக்கு : 077 777 5068

### DHL துரித பொதிகள் சேவை

சகல நாடுகளுக்குமான துரித பொதிகள்
3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
சாதாரண சேவை UK - 1000/=, Canada - 1000/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற் T.P: 0777 55 45 28
321, K.K.S. Road (முட்டாஸ் கடைச் சந்தி அருகாமையில்), யாழ்ப்பாணம்.

### CANADA VISA

1) Minor Education - (Age Limit - 7 to 17 years) தாய், தந்தை இருவரும் பிள்ளையுடன் பயணிக்கலாம்.
2) Visitor Visa - கனடாவில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் உள்ளோர் விண்ணப்பிக்கலாம்.
3) Student Visa - IELTS 6.00 உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். (Jan 2024)
4) Work and Study Program - Course fee after Visa
மற்றும் சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
Contact: VISA Consultant,
136, Adiyapatham Road, Thirunelvely, Jaffna. T.P: 077 038 5584

### விற்பனைக்கு

கீழ் உள்ள பொருட்கள் விற்பனைக்கு உள்ளது.
* சிங்கர் சபாரி மோட்டார் சைக்கிள் சிறிது காலம் பாவிக்கப்பட்டது.
* தண்ணீர் இறைக்கும் வவுசர் (3000L) பாவித்தது. (ரக்ரரில் இழுத்து சென்று தென்னந் தோட்டத்திற்கு நீர் இறைக்க பயன்படுத்தலாம்)
* காவலாளி தகர கொட்டகை/அதிஸ்டஇலாப ரிக்கற் விற்க பயன்படுத்த கூடிய கூடாரம்.
* இந்தியாவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட றொட்டி மா குழைக்கும் புதிய மெசின்.
(உணவகங்கள், திருமண மண்டபங்களுக்கு உகந்தது)
T.P: 077 64 91027
(CS 25899 A-1)


## மரண அறிவித்தல்

தோற்றம் 09 • 10 • 1931



மறைவு 07 • 08 • 2023

### திருமதி முத்தம்மா சின்னத்துரை

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்தம்மா சின்னத்துரை கடந்த (07.08.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு செல்லாச்சி தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்துரை (கிளி) அவர்களின் அன்பு மனைவியும், விமலராணி சிவம் (ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர்), திலகராணி, மகேந்திரன், கமலாம்பிகை, தெய்வேந்திரன் (தெய்வா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சிவம், கணேசன், செந்தூர்செல்வி மற்றும் வசந்தாதேவி, ஜெயராசா (ஜெயா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், கனகம்மா, Dr.தாமோதரம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, கமலாதேவி, குணமணிதேவி, மேசன் பொன்னையா, முத்தம்மா, சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சத்தியேந்திரா (சென்ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவன்), டர்சிகா (சுண்டிக்குளி - பழைய மாணவி, சம்பத்வங்கி உத்தியோகத்தர்), நோர்வே வாழ் கீர்த்திகா, சந்துசன், கபிசன், நிதுசன், அனிக்கா, சபேசன், புவனேசன், ரதீசன், யதூசன், அகிசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜஸ்விந்தின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2023) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் (10 / 2, நடுத்தெருலேன், அரியாலையில்) நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 4.00 மணியளவில் அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

10/2, நடுத்தெருலேன்,
அரியாலை.

தகவல்:
குடும்பத்தினர்.
077 907 3602

(cs 51563) (N.1)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org